323

[தொகுதி 7.] 1928ஸு டிசெம்பர்மீ 1உ [பகுதி 11.

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஹு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" என்ற நாவல்கள் வெளியாகி இப்பொழுது "இரத்தினாபாய் அல்லது இரகசிய சங்கம்" என்ற நாவல் தொடங்கி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும்.

உள் நாட்டிற்கு வருஷ சந்தா	ரூ.	2—8—0
வெளி நாட்டிற்கு	,,	3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

கடைசியில் பேச்சுமுடிந்தபின் கிருஷ்ணராவ் கண்ணம்மாளையும் ஜகநாதனையும் நோக்கி "நான் அந்த நவீனமுறை அடையாளங்களைக் குறித்தனுப்பியது தவறென்று அஞ்சுகிறேன். ஏனெனில் அக்குறிகளைப் பற்றிய விஷயம் அக்கள்ளக் கூட்டத்தார்க்கு எந்த விதத்தாலோ தெரிந்து விட்டிருக்கிறது. அதனால் அவர்கள் நாம் யாரைத் தேடுகிறோம் என்பதை அறிந்துகொண்டு எச்சரிக்கை யடைந்து விட்டார்கள். இவ்விஷயத்தில் வேலைசெய்தவர்கள் யாரோ முட்டாள்தனமாய் நடந்துகொண்டிருக்கிறார்கள். யாரைத்தான் நம்புவதென்று தெரியவில்லை" என்று வெறுப்போடு கூறினான்.

கண்ணம்மாள்:— "என்னதான் சங்கதி? என்ன கூறுகிறார் கருணாகரம்பிள்ளை?" என்றாள்.

கிருஷ்: — "நான் கொடுத்த அடையாளங்களைக் கொண்டு நமது ஆட்கள் வேலைசெய்யத் தொடங்கிய ஒரு மணி நேரத்திற்குள் மரகதத்தைப் பிடிக்கப்போகிறார்கள் என்ற வதந்தி எங்கும் பரவிவிட்டதாம். அவர்கள் அசாத்தியமான ஆசாமிகள். அவர்களுக்கு எப்படியோ இந்த நவீனமுறையாய் நாம் வேலைசெய்வது தெரிந்துவிட்டிருக்கிறது. அச்சங்கதிகளை யெல்லாம் கூறிவிட்டு கருணாகரம்பிள்ளை முடிவில் மரகதம் எங்கோ மாயமாய்ப் போய்விட்டாள் என்று கூறுகிறார்." என்றான்.

கண்ணம்மாள்:—"நான் மங்கம்மாளின் அழகுமாளிகையில் அவள் குரலைக்கேட்டேன் என்று சத்தியம் செய்கிறேன்" என்றாள்.

கிருஷ்:—"டாக்டர் வீரப்பனும் மறைந்து விட்டான். நீ அவன் பேசியதையும் கேட்டதாய்க் கூறினை, அது வரையில் உண்மையாகவே யிருக்கலாம்" என்றான்.

18653

கண்ணம்மாள் அவன் கூறுகிற மாதிரியால் இன்னும் ஏதோ மர்மம் இருக்கிறது என்று உணர்ந்து மிக்க வியப்பும் கலவரமுமடைந்து "என்னவான சங்கதி? முடிவில் ஏதோ பெரியமர்மம் இருபபதாய்த் தெரிகிறது." என்றாள்.

கிருஷ்ணராவ் "விசேஷமொன்றுமில்லை. மரகதமே மங்கம்மாள்" என்றான்.

15—வது அத்தியாயம்.

மறுநாள் காலை கண்ணம்மாள் கிருஷ்ணராவின் இரசாயன சாலைக்கு வந்தாள். வழக்கப்படி கிருஷ்ணராவ் ஜெகநாதன், கண்ணம்மாள் மூவரும் ஆலோசனைக்கு உட்கார்ந்தார்கள். கண்ணம்மாள், "நான் மங்கம்மாளின் அழகு மாளிகைக்கு மறுபடி செல்ல விரும்புகிறேன். இப்போது அங்குச் செல்வது எனக்குப் பழக்கமாய் விட்டது. அங்கு என்னவோ மர்மங்கள் இருப்பதாக எனக்குத் தெரிகிறது. அவற்றை யெப்படியேனும் கண்டு பிடிக்கவேண்டும். அங்கு முதலாளியாயிருப்பவள் மங்கம்மாளோ அல்லது மரகதமோ, அவள் யாராயிருந்தாலும் சரி, அவளை நான் கண்டு பிடித்தே தீரவேண்டும். என் போன்ற ஒரு பெண் கள்ளியை நான் கண்டு பிடிக்காவிட்டால், ஆண் கள்ளர்களை யெப்படிக் கண்டு பிடிக்கப்போகிறேன். இதைவிட வேறு அவமானமே வேண்டியதில்லை.

அதோடு அந்த டாக்டர் வீரப்பன் என்பவனைப்பற்றி நீ கூறியதை நான் மறந்துவிடவில்லை. இப்போது நான் அங்குப் பழகி விட்டிருப்பதால் அவர்கள் என்னிடம் தாராளமாய்க் கலந்து கொள்வார்கள்" என்றாள்.

கிருஷ்:—"இது நல்ல ஆலோசனையே. இந்த முறையவர்கள் உன்னிடம் தங்கள் இரகசியங்களில் சிலவற்

றைக் கூறிவிடுவார்கள் என்றே நான் நம்புகிறேன். ஆயினும், ஒரு விஷயம் இருக்கிறது. அதைப்பற்றி மட்டும் நீ விசேஷ எச்சரிக்கையோடிருக்கவேண்டும்'' என்றான்.

கண்ணம்மாள்:—“ அது என்ன விஷயம்?'' என்றாள்.

கிருஷ்:—“அவர்கள் வெளியிலிருப்போரோடு எவ்வாறு போக்கு வரத்து வைத்துக்கொண் டிருக்கிறார்கள் என்பதை யறியவேண்டும். அவர்கள் உன்மேற் சந்தேகங்கொண்டுவிட்டால் என்ன வேண்டுமாயினும் செய்துவிடத் துணிவார்கள். அவர்கள் கூட்டத்தில் பலசாலிகளான மாதர்களும் ஆடவரும் இருக்கிறார்கள். அங்குச் சம்பந்தப்பட்டவர்களில் டாக்டர் வீரப்பன் தவிர வேறு ஆட்களுமிருக்கிறார்களென்றே நான் கருதுகிறேன். டாக்டர் வீரப்பன் ஒருவனே எத்தகைய அநீதிக்கும் அஞ்சாதவன்'' என்றான்.

கண்ணம்மாள்:—“ஆகா! இந்த விஷயத்தை பிரத்தியேகமாய் நான் கவனத்தில் வைத்து நடப்பேன். நான் திரும்பி வரும்போது ஏதேனும் சமாசாரம் கொண்டு வருவேனென்றே நம்புகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அவள் தலை மறைந்ததே ஜெகநாதன் கிருஷ்ணராவை நோக்கி “நண்பனே! இவள் எத்தகைய ஆளையும் வசப் படுத்திவிடக் கூடியவள் என்று நான் நினைக்கிறேன்'' என்றான்.

கிருஷ்:—“ஜெகநாதம்! அப்படியல்ல. நான் எப்படி மணம் புரிவதில் பிரியமில்லாமலிருக்கிறேனோ அவ்வாறே யவளும் என்று நினைந்துகொள்'' என்றான்.

அன்று முற்பகல் முழுமையும் கண்ணம்மாள் சங்கதி யொன்றும் தெரியவில்லை. பிற்பகலும் பாதி கழிந்தது.

கிருஷ்ணராவின் மனம் கலக்கமடையத் தொடங்கியது. மறு நிமிடம் யாரோ அவசரமாக வரும் காலடிச்சத்தம் கேட்டதும் உடனே கதவும் துரிதமாய்த் திறக்கப்பட்டது.

மறுவிநாடி கண்ணம்மாள் உடனே உள்ளே வந்ததும் "நான் சற்றுநேரம் உட்கார்ந்து என் மனதைத் நிடப்படுத்திக்கொள்ளட்டும்" என்று கூறிக்கொண்டே தன் கன்னங்களைக் கரத்தால் அழுத்திக்கொண்டு "ஓ! என் பாடு போதுமென்ருய்விட்டது" என்ருள்.

கிருஷ்ணராவ் "என்ன சங்கதி? என்ன சங்கதி?" என்று ஆத்திரத்தோடு கேட்டுக்கொண்டே யவளை யொரு ஆசனத்திலமர்த்தி அவளுக்குத் தாகத்திற்குக் கொடுக்கும்படி ஜெகநாதனிடம் கூறினுன்.

கண்ணம்மாள் உட்கார்ந்தபின் "சற்று பொறுங்கள். நடந்தவையாவும் கிரமப்படி மனதிற்கு வருகின்றனவாவென்று பார்த்துக் கொள்ளுகிறேன்". என்று கூறி இரண்டொரு நிமிடங்கள் கழித்துப் பின் வருமாறு கூறினுள்:

"நான் முன் போலவே உள்ளே சென்றேன். இப்போது அவர்கள் என்னை நடத்தியது முன் நடத்தியதற்கு முழுமையும் வேறு விதமாகவிருந்தது. முதல் தடவையே என்னைப்பற்றி அவர்களுக்கு நல்ல அபிப்பிராய மேற்பட்டுவிட்டிருக்க வேண்டும். அதனுற்றுன் இரண்டாவது முறையே எனக்கு ஒன்றும் மறைக்கப்படாமல் காட்டப்பட்டன. என்மேல் அவர்களுக்குச் சந்தேகமில்லையென்பது நன்ருக விளங்குகிறது.

வேலைக்காரப்பெண் வாசனையூட்டப்பட்ட ஸிகாரெட் ஒன்று கொண்டு வந்து கொடுத்தாள். நான் அதைப் பிடித்தேன். நாம் செய்யும் காரியங்களை அங்குள்ளார் நன்ருய்க் கவனிக்கிருர்கள். நான் ஒன்றைப் பிடித்ததே அவள் இன்னென்று கொடுத்தாள். அதில் என்ன விருந்ததோ—

பெரும்பாலும் கொஞ்சம் அபினி யென்று நினைக்கிறேன். அது எனக்கு ஒருவித உற்சாகத்தை யுண்டாக்கியது. பிறகு ஒருவித உறக்கம் உண்டாயிற்று. நான் அந்த இரண்டாவது ஸிகாரெட்டை யரைகுறையாகவே பிடித்து எறிந்து விட்டேன். அப்போதே எனக்குத் தலை சுற்றுவதுபோலிருந்தது. நான் அடியோடு சுவாதீனத்தை யிழந்து விடுவேன் என்று பயப்படவில்லை. புத்தி மந்தமாகிவிட்டால் அங்கு நடக்கும் விஷயங்களைக் கவனிக்க முடியாமற் போய் விடும் என்றே அஞ்சினேன்" என்றாள். கிருஷ்ணராவ், "அந்த ஸிகாரெட்டைத் தவிர வேறொன்றும் அங்குக் காணப்படவில்லையோ?" என்று வினவினான்.

கண்ணம்மாள்:—"ஆகா இருந்தது. நானே யங்கு நேரில் காணாவிடினும் அங்கிருந்தவர்களில் இரண்டொருவர் பேசுவதால் அறிந்துகொண்டேன். ஒருவர் சீட்டா என்றும் இன்னொருவர் செண்டு என்றும் பேசிக் கொண்டார்கள். ஒரு மாதிடம் கொகேன் (அபினிச் சத்து) மணம் வீசிற்றென்று நினைக்கிறேன். அவள் ஒரு சிறு பொன்டப்பி வைத்துக்கொண் டிருக்கிறாள். அவள் அந்த டப்பியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அடிக்கடி அதிலிருந்து ஒருவித வெள்ளைத்தூள் போன்ற வஸ்துவையெடுத்து இழுத்து முகருகிறாள். அதோடு அவளிடம் வைக்கப்பட்டிருக்கும் ஒருவித சாராயம் போன்றதை யருந்துகிறாள்." என்றாள்.

கிருஷ்:—"ஆம்; அப்படித்தான் அதை யருந்துவது. அபினியிலிருந்து செய்யப்படும் போதைவஸ்துக்களைக் கள்ளத்தனமாய் விற்பது இங்கு நடந்துவருகிறது. இப்போது அது அதிகமாய்விட்டது. அப்புறம் கூறு" என்றான்.

கண்ணம்மாள்:—"நான் ஒரு தந்திரம்செய்தேன். அதைப்

பற்றி யிப்போது சந்தோஷப் படுகிறேன். அங்குச் சென்ற சற்றுநேரத்திற் கெல்லாம் போதையேறிய வன்போல் அபிநயம் செய்வதுதான் நலம் என்று எனக்குப் புலப்பட்டது. ஒரு வேலைக்காரி என்னிடம் வந்து மிக்கவணக்கத்தோடும் அன்போடும் 'ஏனம்மா! சற்று இளைப்பாறப் பிரியமோ? இங்குச் சந்தடியா யிருந்தால் அதோ பக்கத்துவீட்டில் நிம்மதியாக இடம் மிக்க சௌகரியமாக அமைக்கப்பட் டிருக்கிறது' என்று சின்னமாளிகைக்குப் பக்கத்திலுள்ள வீட்டைக் காட்டினாள்." என்றதே கிருஷ்ணராவ் "நீ போகவில் லையே? என்றான்.

கண்ணம்மாள்:—இல்லை. நான் ஒரு இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று கூறிவிட்டேன். என் அந்த இடம் ஒரு சீட்டாக்கிடங்கே.

கிருஷ்:—"சந்தேகமின்றி. நீ கூறிக்கொண்டு வரும்போதே நான் சங்கதியை யறிந்துகொண்டேன். நீ அந்த வீட் டிற்குள் இரண்டாம் முறைபோய் வந்ததைப்பற்றி மிக்க சந்தோஷப்படுகிறேன். எப்படியாயினும் இப்போது அங்குள்ளவர்களின் யோக்கியதை நிச்சயமாகத் தெரிந்து விட்டது. அங்குள்ளவர்கள் வெளியிலிருப்ப வர்களோடு சம்பாஷணைசெய்ய என்ன ஏறப்பாடுசெய் திருக்கிறார்கள் என்பதை யறிந்து கொண்டாயா?" என்றான்.

கண்ணம்மாள் "ஆகா. நான் யாவற்றையும் சரியாய்க் கவனிக்க மிக்க சிரத்தை யெடுத்துக் கொண்டேன். அங்கு ஒரு டெலிபோன் இருக்கிறது. உண்மையில் அதற்கொரு ஆள் வேண்டுவதே யில்லை. ஆயினும் அதற்கொரு பெண்ணை வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அடுத்த வீடிருக் கிறதே—அங்குக்கூட ஒரு டெலிபோன் இருக்கிறது

அதற்கொரு மாது இருக்கிறாள். அவள் யார் தெரியுமா? அவள் தான் ஈட்டித்தானனிடம் பணம் கொண்டுவந்து கொடுத்தவள். நமக்கு யாரென்று தெரியவில்லையே அதே மாது. அங்கு அந்த அடுத்த வீட்டிலுள்ள டெலிபோனில் வேலை செய்கிறவள் என்று தெரிகிறது" என்றாள்.

கிருஷ்: — "அப்படியாயின் அங்கு இரண்டிடங்களிலும் டெலிபோன்கள் இருக்கின்றன. அத்தகைய விடங்களில் துணிகரமான போக்கிரிகள் இருக்கவே யிருப்பார்கள். ஆகையால் நமது ஆட்களில் யாரேனும் உள்ளே அங்குச்சென்றால் நாம் வெளியி லிருந்தபடி அவர்களோடு சமாசாரப் போக்கு வரவுக்கு வழி வைத்துக் கொண்டிருக்க வேண்டும் இவர்களோடு மிக்க ஜாக்கிரதையாய் வேலைசெய்ய வேண்டும்" என்றான்.

அதன் பிறகு கண்ணம்மாள் கொஞ்சநேரம் இளைப்பாறி வருவதற்காக வீட்டிற்குச் சென்றாள். கிருஷ்ணராவ் மேஜையின்மேல் தாளம் போட்டுக்கொண்டே சற்றுநேரம் சிந்தனையிலிருந்தான். சுமார் பத்து நிமிடங்கள் கழித்து அவன் தட்டென்று துள்ளி யெழுந்து, ஜெகநாதனை நோக்கி, "நான் வெளியிலிருந்தபடி அந்த இரண்டு கட்டிடங்களையும் பார்க்கப்போகிறேன். புறப்படு செல்வோம்" என்றான்.

உடனே நண்பர் இருவரும் அங்கிருந்து புறப்பட்டுச் சின்னமாளிகையிருக்கும் வீதிக்குச் சென்றார்கள். அவர்கள் அக்கட்டிடத்தின் எதிரே பார்த்துக்கொண்டே சென்று வீதியின் கோடியில் திரும்பினார்கள். கிருஷ்ணராவ் அங்கிருந்த வீடுகளை யுன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டே சென்று கடைசியில் ஒரு வீட்டெதிரில் நின்றான். அந்த வீட்டின் முன் "அறைகள் வாடகைக்கு விடப்படும்" என்று விளம்பரப் பலகை தொங்கவிடப்பட் டிருந்தது.

அவை சொல்ப வாடகையுடைய விடங்கள். கிருஷ்ணராவ் "நாம் குத்தகைதாரரைக்கண்டு அறைகளைக் காட்டச் சொல்லுவோம்" என்றான்.

ஒரு அறை முதல் மாடியின் பின்பக்கமிருந்தது. கிருஷ்ணராவ் வாடகையைப்பற்றிச் சற்றேனும் கவனிக்கவேயில்லை. அந்த அறையின் சாளரத்திலிருந்து பார்த்தால், சின்ன மாளிகையின் பின் பக்கமும் மற்ற வீடுகளின் பின்பக்கமும் நன்ருய்த் தெரியும். ஒரு விநாடியில் அந்த அறை வாடகைக்கு அமர்த்தப்பட்டது. பணத்தைக் கொடுத்துவிட்டுச் சாவியை வாங்கிக்கொண்டதே ஜெகநாதன் "இப்போதென்ன செய்யப் போகிருய்?" என்ருன். கிருஷ்ணராவ் "இப்போதொன்றும் செய்யமுடியாது. நாம் இரசாயன சாலைக்குச் சென்று திரும்பி வருவதற்குள் இருட்டாய் விடும். அப்போது ஏதேனும் செய்யக்கூடும்" என்ருன்.

அன்று இரவு இருவரும் புறப்பட்டார்கள். இரவு மிக்க இருளாகவிருந்தது. கிருஷ்ணராவ் தன் இரசாயன சாலையிலிருந்து இரண்டு சுருளைக் கம்பிகளையும், டெலிபோன் போன்ற கருவியையும் எடுத்துச்சென்ருன். இருவரும் சின்னமாளிகையிருக்கும் வீதியின் பின்புறமுள்ள வேலியைக் கடந்து தடமாடிக்கொண்டு சென்ருர்கள். கிருஷ்ணராவ் மின்சாரக் கள்ள விளக்கைக் கையில் கொண்டு வந்திருந்தான். ஆயினும் மிக்க இருட்டாயிருந்தாலும் அதை யுபயோகிக்கவில்லை.

வேலியின் பின்புறம் ஒரு இடத்தில் இருவரும் பதுங்கியதும் கிருஷ்ணராவ் " ஆ! நான் எதிர்பார்த்த மாதிரியேயிருக்கிறது. டெலிபோன் கம்பிகள் வேலியின் மேற்பக்கம் செல்கின்றன. இதோ இந்த இடத்தில் அவை 71-வது எண்ணுள்ள வீட்டிற்குள், அழகு மாளிகைக்குள் செல்

கின்றன. இதோ இவை 70-வது வீட்டிற்கு செல்கின்றன- அந்தப் பக்கத்துக் கட்டிடம். அதற்கப்புறம் சின்ன மாளிகை நெடுகச் செல்கின்றன" என்றான்.

அதற்குள் அவர்கள் வீடுகளின் ஓரத்தில் நெருங்கி விட்டார்கள். இரண்டு வீடுகளிலும் சாளரங்களில் திரைகள் விடப்பட்டிருந்தன. ஆகையால் இவர்கள் மட்டும் சந்தடி செய்யாதிருந்தால் யாரேனும் பார்ப்பார்கள் என்ற பயமேயில்லை. புறக்கடைப்பக்கம் சுத்தம் செய்யப்படாமலே யிருந்தது. அந்த விடத்தில் ஒரு விநாடி கிருஷ்ணராவ் விளக்கைத் திருப்பிப் பார்த்து அங்கு டெலிபோன் கம்பிகள் எப்பக்கம் செல்கின்றனவென்று பார்த்தான். பார்த்ததும் "நான் எதிர்பார்த்ததைவிட விஷயம் மேலாகவே யிருக்கிறது. அந்த இரண்டு கம்பிகளும் முதல் மாடிக்குச் செல்கின்றன. இன்னொரு ஜதை அழகு மாளிகைக்குச் செல்கிறது" என்றான்.

கிருஷ்ணராவ் இரண்டு வீடுகளின் மத்தியிலிருந்த கூரை மேலேறி வழக்கமாய் டெலிபோன் வேலை செய்கிறவர்கள் போலவே மிகச் சுறுசுறுப்போடு வேலை செய்யத் தொடங்கினான். முன் இருந்த கம்பிகளில் இரண்டு வீடுகளுக்கும் சம்பந்த முண்டாகும்படி தன் கம்பிகளைப் பிணைத்து விட்டான்.

அதன் பிறகு அக்கம்பிகளை யவர்கள் வாடகைக்கு ஏற்பாடு செய்திருக்கும் அறையின் சாளரத்திற்குள் கொண்டு போய் விட்டு விட்டார்கள். அதன் பிறகு இருவரும் மெதுவாய்த் தங்கள் அறைக்குள் போய்ச் சேர்ந்தார்கள். கிருஷ்ணராவ் "இனி அந்த அழகு மாளிகையின் பக்கத்து வீட்டின் கீழ்க் கட்டுக்குள் செல்கிறவர்கள் ஒருவருமறியாமல் நம்மோடு பேசலாம்" என்றான்.

ஜெகநாதனுக்குச் சங்கதி சரியாக விளங்கவில்லையாதலால் "எப்படி? எனக்கொன்றுந் தெரியவில்லை" என்றான்.

கிருஷ்:—"நான் அந்த வீட்டின் அறையிலுள்ள டெலி

போன் கம்பியில் இதைச் சேர்த்து விட்டிருக்கிறேன். அங்குச் செல்லும் நமது ஆட்கள் சாதாரணமாய் நம்மோடு பேசலாம்" என்ருன்.

அன்றிரவு அவர்கள் அதற்குமேல் ஒன்றும் செய்ய முடியவில்லை. மறுநாள் கண்ணம்மாளின் வரவிற்கு எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். கண்ணம்மாள் வந்ததும் இரவு இவர்கள் செய்த காரியங்களையெல்லாம் கூறியபின், கிருஷ்ணுராவ் "இப்போது அந்த விடத்திற்குச் சென்று சாமார்த்தியமாய் விஷயங்களையறிந்துவரக் கூடியவர்கள் யார்? அந்த ஆள் மிக்க புத்தி சாமார்த்தியம் தைரியம் முதலிய குணங்களை யுடைத்தாயிருப்பதோடு நாம் பூரணமாய் நம்பத்தக்க ஆளாகவும் இருக்கவேண்டும்" என்ருன்.

ஜெகநாதன்:—"அந்த அழகு மாளிகைக்குச் செல்ல விருப்பமுடைய ஆள் யாரேனும் கருணுகரம் பிள்ளையிடம் இருப்பார்களென்று நான் நம்புகிறேன். அல்லது நமது கண்ணம்மாளே தன்னிடமிருக்குமாட்களில் ஒருவரை யனுப்பலாகும் என்று கருதுகிறேன்" என்ருன்.

கிருஷ்:—"அங்கு நமது ஆட்களில் யார் செல்வதாயினும் சரி, அவர்கள் தங்களுக்கு ஆபத்து நேரிடும் என்று கருதுவதாயின் உடனே டெலிபோ னருகிலோடி ஆபத்து என்று ஒரே வார்த்தை கூறவேண்டியதே. உடனே நாம் பாய்ந்து உள்ளே செல்வோம். பிறகு..." என்ருன்.

கண்ணம்மாள்:—"இவ்வளவு யோசனை யேன்? நானே செல்கிறேன்" என்ருள்.

இதைக் கேட்டதே யிரண்டு ஆடவரும் திடுக்கிட்டு விட்டார்கள். கிருஷ்ணுராவ் "ஓ! நீ போக வேண்டாம்" என்ருன்.

கண்ணம்மாள்:—"என்னையே போக விடுங்கள். நம்பி

யனுப்பத் தக்க ஆள் வேறு யாருமில்லை. மேலும் அந்த இடம் எனக்கு நன்ருகத் தெரியும்" என்ருள்.

கண்ணம்மாள் இரண்டாம் முறை யங்குச் சென்றது முதல் அதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தாள். ஆகவே அவள் ஒருவிதமான தீர்மானத்தோடு அவ்வாறு கூறினுள்.

கிருஷ்ணுராவும் கண்ணம்மாளும் ஒருவரையொருவர் உற்று நோக்கிப் பார்த்தார்கள். கிருஷ்ணுராவ் அவளுடைய பாதுகாப்பிற்காகவே அத்தகைய ஏற்பாடுகளைத் தும் செய்தான்போல் தோன்றியது. கண்ணம்மாள் வரையில் அவள் முன்னமே இவ்வாறு நடக்கத் தீர்மானம் செய்து கொண்டிருக்கிருள் என்று தெரிந்தது.

கிருஷ்ணுராவ், "கண்ணம்மா! நீ மிக்க துணிகரமான துப்பறியும் ஆள். நான் பார்த்தவரையில் நீ ஒரு ஆளுக்கே யிரண்டாவதாயிருக்கிருய். உன் பலவந்தத்தின்மேல் உன்னை யிக்காரியத்திற்கனுப்ப நான் ஒப்பவேண்டியதாக விருக்கிறது" என்ருன்.

கடைசியில் கண்ணம்மாள் சின்ன மாளிகைக்குள் நுழைவதை யவர்கள் இருவரும் மிக்க மனக்கலக்கத்தோடு பார்த்துக்கொண் டிருந்தார்கள். கிருஷ்ணுராவும் ஜெகநாதனும் அவள் செல்லவேண்டிய வீட்டினருகு வரையில் சென்று அவள் உள்ளே சென்றபின் திரும்பினுர்கள். இருவரும் துரிதமாய்ச் சென்று தாங்கள் வாடகைக்கு அமர்த்திய அறைக்குப்போய்ச் சேர்ந்தார்கள். அங்குச் சென்றதும் இருவரும் நாற்காலிகளில் உட்கார்ந்து ஒவ்வொரு விநாடியையும் ஒவ்வொரு யுகம்போல் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

நெடுநேரம் கண்ணம்மாளிட மிருந்து ஒரு சங்கதியும் வரவில்லை. ஜெகநாதன் "அந்தோ! அத்தகைய நல்ல பெண், புத்தி சாமார்த்திய முடையவள், அங்குப்போய்

எப்படிச் சிக்கிக்கொண்டாளோ. எத்தகைய ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டாளோ" என்று தனக்குள் கலவரமடைந்தான். கிருஷ்ணராவின் முகத்தில் உண்டாகிய விகாரத்தால், அவனும் "நாம் என்ன முட்டாள்தனம் செய்துவிட்டோம். நாம் முதலில் எண்ணியபடியேயேன் அவளை யனுப்பாமலே நிறுத்திவிடாமற் போனோம். அவள் எத்தகைய ஆபத்தில் சிக்கிக்கொண்டாளோ" என்று மிக்க கலக்கமடைந்தவன் போலவே புலப்பட்டான்.

கண்ணம்மாள் இருமுறை யங்குச்சென்று அங்குள்ள விவகாரங்களைக் கூடியவரையில் கண்டறிந்து வந்த இயம்பியபடியால் அத்தகைய விடத்தில் அவளுக்கு என்ன ஆபத்துண்டாகுமோவென்று அவனுக்கு மிக்க கலக்கமே யுண்டாயிற்று. அங்கு நடக்கும் அநீதமான விவகாரங்களைக் கவனிக்கும்போது அங்குள்ளவர்கள் எப்போதும் தாங்களகப்படாம லிருப்பதற்காக மிக்க எச்சரிக்கையோடேயே யிருக்க வேண்டி யிருக்கிறது. ஆகையால் அப்படிப்பட்டவர்கள் பகிரங்கமாய் அந்த விடத்தில் ஸ்திரீகள் மட்டுமே வருவதென்று தோன்றும்படி செய்தாலும் இரகசியமாய் ஆடவர்களையும் பாதுகாப்பிற்கு வைத்துக்கொண்டே யிருப்பார்கள். இப்படிப் பட்டவர்களுக்குப் பாதுகாப்பாய்ப் பலம் பொருந்திய போக்கிரிகள்தான் இருக்கவேண்டும். இவ்விஷயங்களெல்லாம் கிருஷ்ணராவுக்கும் ஜெகநாதனுக்கும் தெரியுமாதலால் அவர்களுக்குக் கண்ணம்மாள் விஷயத்தில் கலக்கம் அதிகமாயிற்று.

கிருஷ்ணராவ் டெலிபோனில் சமாசாரம்வரும் குழலின் முனையிலுள்ள கிண்ணம் போன்றதைச் செவியில் வைத்துக்கொண் டிருந்தான். கடைசியில் அவன் முகத்தில் சந்தோஷப் பிரகாசம் உண்டாயிற்று. "ஆ! கண்ணம்மாள் நிம்மதியோடேயே யிருக்கிறாள். தான் அழகுமாளிகையி

லிருந்து போதையோடு அங்கு வந்திருப்பவள்போல் தந்திரமாகப் பாசாங்குசெய்துவிட்டாள். அவள் அதை நம்பும்படி பக்குவமாய் நடந்துகொண் டிருக்கிறாள். தந்திரமாய்க் கீழ்க்கட்டில் பின்பக்கமுள்ள அறை தனக்குவேண்டுமென்று கேட்டு எப்படியோ சரிப்படுத்திக் கொண்டாள். இல்லாவிட்டால் நம்மோடு பேசமுடியாது. வெளியில் நடக்கும் சங்கதிகள் தனக்குத் தெரிவதற்காகவும், அங்குள்ளவர்களுக்குச் சந்தேக முண்டாகாம லிருப்பதற்காகவும் அந்த அறையின் கதவுகளைத் திறந்து வைத்துக்கொண் டிருக்க வேண்டும். அதனால் சமயம் பார்த்தே நாம் அங்குப் போட்ட கம்பிகளை யங்குள்ள டெலிபோனில் அவள் சம்பந்தப்படுத்த வேண்டும். அதனாற்றான் இந்நேரமாயிற்று. இப்போது எல்லாம் சரியாய்விட்டது" என்றான்.

பிறகு டெலிபோனில் கண்ணம்மாளுக்கு, "சரிதான் கண்ணம்மா! நீ என்ன கூறினாலும் கேட்டுக்கொள்ள நாங்கள் சர்வாயத்தமாய்க் காத்துக்கொண் டிருக்கிறோம். ஆயினும் நீ மிக்க ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அதிகமாகக் கூற அவசரப்பட வேண்டாம். உனக்குப் பூரணமான ருசுவகப்படுகிற வரையில் மிக்க ஜாக்கிரதையாய்ப் பேசு. நீ வெளியில் சமாசாரம் அனுப்புகிறாய் என்று அவர்களுக்குச் சந்தேக முண்டாகுமாறு செய்துவிட்டாயோ, பிறகு அவர்கள் உன்வாயை யடியோடடக்கிவிட எதை வேண்டுமாயினும் செய்யத் துணிவார்கள். பத்திரம் பத்திரம். ஏதேனும் ஆபத்து நேரிடப்போகிற தென்று கொஞ்சம் தெரிந்ததோ உடனே எங்களுக்குத் தெரிவித்துவிடு" என்று கூறினான்.

அதன்பிறகே கிருஷ்ணராவின் மனம் சற்று நிம்மதியடைந்தது. அவன் கண்ணம்மாள் கூறும் சங்கதியைக் கேட்டுக்கொண்டிருந்தபின் ஜெகநாதனை நோக்கி "கண்ணம்மாள் மிக்க புத்தி சூக்ஷும முடையவள். இதற்குள்ளாகவே

அனேக விஷயங்களை யறிந்துகொண்டாளாம். ஆனால் அவற்றை விவரமாய்க்கூற இப்போது அவகாசமில்லை யென்கிறாள். ஜெகநாதம்! நான் இங்குக் கவனித்துக்கொண் டிருக்கிறேன். எதற்கும் முன்ஜாக்கிரதையாக விருப்பது நலம். ஆகையால் நீ போய்ச் சமீபத்தில் எங்கே பாராக்கொடுக்கும் போலீஸ்காரன் இருக்கிறான் என்று பார்த்து வருகிறாயா?" என்றான்.

ஜெகநாதன் அவ்வாறே சென்றான்.

16—வது அத்தியாயம்.

ஜெகநாதன் சற்று தூரத்தில் பெரிய வீதியில்தான் போலீஸ்காரன் இருக்கிறான் என்பதையறிந்து கொண்டு பத்து நிமிடங்கள் கழித்துத் திரும்பி வந்தான். அச்சமயம் கிருஷ்ணராவ் கண்ணம்மாளிடம் இருந்து வரும் சங்கதியைக் கேட்டுக் கொண்டிருக்கிறானாதலால் ஜெகநாதன் உள்ளே வருவதைக் கண்டதே சந்தடி செய்யாதே என்று விரலாற் சமிக்கை செய்தான்.

பேசி முடிந்தபின் கிருஷ்ணராவ் ஜெகநாதனை நோக்கி "இப்போது கண்ணம்மாள் கூறிய சங்கதி யென்ன தெரியுமா? அவள் இருக்கும் அறைக்கு அடிக்கடி ஆட்கள் வந்து கொண்டே யிருக்கிறார்கள். ஆதலால் அவள் நினைத்த போது பேச அனுகூலப்படவில்லை. அந்த வீட்டில் மேல் மாடியில் யாரோ ஒருவர் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த ஆள் மரகதம் அல்லது மங்கம்மாள் என்று கூறப்பட்ட ஆளோ அல்லது இரத்னபாயோ என்பது தெரியவில்லை. அங்குள்ள ஆட்கள் மிக்க ஜாக்கிரதையாகக் காவலிருக்கிறார்களாம்" என்றான்.

ஜெகநாதன் குசுகுசு வென்று "கிருஷ்ணராவ்! இது

மிக்க ஆபத்தான விவகாரமல்லவா ? நீ மிக்க தூரம் ஆபத்தில் நுழைகிறாய் என்று எனக்குப் புலப்படுகிறது. அங்கு இரண்டு டெலிபோன்களிருக்கின்றன. இரண்டு பெண்களிருக்கிறார்கள். நீ பேசும் சமயத்தில் அவர்கள் யாருக்கேனும் சமாசாரம் அனுப்புவதாய் அல்லது யாரேனும் கூறும் சமாசாரத்தை வாங்கிக் கொள்வதாகவிருந்தால் நீ பேசுவதும் அவர்களுக்குக் கேட்குமல்லவா! அப்போது யார் பேசுவதென்று தெரிந்து கொள்வார்கள். பிறகு பெரிய வம்பாகவல்லவோ முடியும் ?'' என்றான்.

கிருஷ்:—'' நீ கூறுவது உண்மையே; ஆனால் செய்த வேலையப்படிப்பட்டதல்ல. நான் வைத்த கம்பிகளின் வழியாய் வரும் சமாசாரம் அக்கம்பிகளின் வழி செல்லாது. அது நவீனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட மிக்க தந்திரமான வேலை. உனக்கு இது மிக்க அபூர்வமாகவே தோன்றும்'' என்றான்.

ஜெகநாதன்:—'' உண்மையில் நீ சாதாரணமாய் இதைப்பற்றிக் கூறினால் நான் நம்பவே மாட்டேன். இப்போது பிரத்தியட்சமாய் நடப்பதால் நம்பவேண்டியிருக்கிறது '' என்றான்.

மறு விநாடி டெலிபோனில் சமாசாரம் வந்தது. அதைக்கேட்ட கிருஷ்ணராவ் ''ஆ கண்ணம்மாள் சரிதான். நீ பேசுவதில் அதிகமாக அவசரப்படாதே. கொஞ்சம் தவறினால் பெரிய ஆபத்தாய் முடியும். நாங்கள் எப்போதும் ஆயத்தமாகவே யிருக்கிறோம். ஆபத்தென்று கொஞ்சம் தெரிந்தால் உடனே கூறிவிடு. இப்போது ஒரு நியாயாதிபதி நம்பும்படியான அவ்வளவு ருசு அகப்பட்டிருக்கிறதே போதும் ; இதைக் கொண்டே யிந்தச் சின்ன மாளிகையை மூடிவிட என்னால் முடியும். இதற்குள் நுழையவும் என்னால் முடியும். நீ மட்டும் ஜாக்கிரதையாகவே யிரு'' என்றான்.

பிறகு கிருஷ்ணராவ் ஜெகநாதனை நோக்கி, "அங்கு ஆடவர்கள் கூட சேர்க்கப்படுகிறார்கள் என்பது தெரிகிறது. யாரோ ஒருவன் அதிக வெறி கொண்டு அமக்களம் செய்கிறானாம். அதற்காக அவனை யடக்க டாக்டர் வீரப்பனைக் கூப்பிடுகிறார்களாம்" என்றான்.

சற்று நேரங்கழித்து டெலிபோனில் செவிவைத்துக் கேட்டுக்கொண்டே யிருந்த கிருஷ்ணராவ் திடுக்கிட்டவன் போல் "ஆ! என்ன? நீ கடைசித்தடவை பேசும்போது அவர்கள் எப்படியோ பார்த்து விட்டார்களா. நீ அவர்கள் உள்ளே வராதபடி கதவை யுட்பக்கம் பூட்டிக்கொண்டாயா. அவர்கள் கதவை யுடைக்கிறார்களா? ஏதேனும் பளுவான சாமான்களை யெடுத்துக் கதவிற்கு முட்டுக் கொடுத்துவிடு. நாற்காலியோ மேஜையோ எது அகப்படுகிறதோ அதை முட்டுக்கொடுத்துவிடு. நாங்கள் இதோ வந்து விட்டோம்" என்று கூறிவிட்டு,

"ஜெகநாதம்! புறப்படு சீக்கிரம். போலீஸாரைத்தேட வேண்டியதில்லை. நாமே செல்ல வேண்டியதே, சீக்கிரம் புறப்படு" என்றான். அவ்வாறு கூறிக்கொண்டே கிருஷ்ணராவ் துரிதமாய் வீதியில் இறங்கிச்சென்றான். ஜெகநாதனும் பின்னால் துரிதமாகவே சென்றான்.

இருவரும் சற்றுதூரம் செல்லுமுன் ஒரு போலீஸ் ஸார்ஜென்ட் உறங்கிக்கொண்டே எதிரில்வந்தான். கிருஷ்ணராவ் அவன் ரோளைப்பற்றி, "அதோ அந்த கட்டிடத்திற்குள் ஒருபெண் அகப்பட்டுக்கொண் டிருக்கிறாள். அவளைக் காப்பாற்ற வேண்டும். நீ கூடவந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும்" என்றான்.

ஸார்ஜென்ட்:—"ஆ! என்ன நீ கூறுவது? எழுபத்திரண்டாவது எண்ணுள்ள வீடு, அது ஒரு மரியாதையான

வீடு. நான் எப்படி தக்க அதிகாரமின்றி யுள்ளே வரலாம்" என்றான்.

கிருஷ்:—"இதோபார்! நீ யாரென்று உன் உடையிலிருக்கும் எண்ணால் நான் தெரிந்துகொண்டேன். அந்த வீட்டில் குற்றம் நடக்கிறதென்று உன்னை யுதவியாய் வரும்படி யழைக்கிறேன். நீ வர மறுத்துவிட்டால் ஈட்டித்தானன் கொள்ளையடித்த பணத்தை யெல்லாம் இதற்காகவே செலவழிப்பேன். பிறகு உன்கதி யென்னாகுமே கடவுளுக்கே தெரியும். பேசாமல் வா. எங்கள் கூட வா" என்றான்.

ஈட்டித்தானன் பெயரைக் கூறியதே ஸார்ஜெண்டின் உறக்கம் எங்கோ பறந்துபோய் விட்டது. அவன், இவன் யாரோ பெரிய ஆசாமியா யிருக்கிறான் என்று திகிலடைந்து அவர்கள் கூடவே செல்லத்தொடங்கினான். அவர்கள் அக் கட்டிடத்தின் வாயிற்படியில் சென்றார்கள். வெளியில் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. வெளிப்பார்வைக்கு எல்லாம் ஒழுங்காகவும் நேர்மையாகவுமே புலப்பட்டது. உள்ளே நடக்கும் குழப்பம் எள்ளளவுகூட வெளியிற் றோன்றவில்லை.

போலீஸ் ஸார்ஜென்ட் மணியடிக்கும் கயிற்றைப்பிடித் திழுப்பதற்குள் கிருஷ்ணாராவ் கீழேயிருந்த மேடைமேலேறி ஒரு சாளரத்தின் கண்ணாடிகளை யுடைத்துவிட்டுத் தன்னிடம் இதுகாறும் மறைத்து வைத்துக்கொண்டிருந்த ஒரு ஆயுதத்தை யெடுத்து சாளரத்தின் கம்பிகளில் ஒன்றைக் கழற்றிவிட்டு, "ஜெகநாதனையும் போலீஸ்காரனையும்நோக்கி, "நீங்கள் கதவைத்திறக்க முயல்வதில் ஒரு பயனுமில்லை. பின்பக்கம் பலமான சங்கிலி போடப்பட்டிருக்கும். உங்களால் திறக்கமுடியாது. இதோ இரண்டாவது கம்பியும் வந்து விட்டது" என்றான்.

சாளரத்தின் இரண்டு கம்பிகள் எடுக்கப்பட்டதே ஆள் நுழையப் போதுமான சந்துண்டாயிற்று. உடனே மூவரும் அவ்வழியாக உள்ளே நுழைந்தார்கள். அச்சமயம் உள்ளேயிருந்து பெருங்குழப்பம் உண்டாகிவிட்டது போன்ற சந்தடி கேட்டது. போதையிலிருந்தவர்கள்கூட ஏதோ ஆபத்து நேர்ந்ததென்றுணர்ந்து அவரவர்கள் அறைவிட்டு வெளியில் ஓடிவிட முயல்கிறார்கள் என்பது தெரிந்தது. மங்கம்மாளுடைய அழகுமாளிகையிலிருந்து இரண்டு பெண்களும் ஒரு ஆட்வனும் மரியாதையாய் அங்கிருந்து வெளியில் செல்லத் தடுமாறிக் கொண்டே முயன்றார்கள்.

கிருஷ்ணராவ் ஸார்ஜென்டை நோக்கி "ஸார்ஜென்ட்! அந்தவழியை யடைத்துக்கொள். நாங்கள் இந்தவீட்டைப் பார்த்துக்கொள்கிறோம்" என்றான். அந்த ஸார்ஜன்ட் மந்தாகாரமாக அந்த வாயிற்படிக்குச் செல்வதற்குள் இன்னும் இரண்டுஜதை யாட்கள் வெளியில் நழுவிவிட்டார்கள். கிருஷ்ணராவும் ஜெகநாதனும் ஒவ்வொரு அறையிலும் நுழைந்தார்கள். எங்கும் இருள்சூழ்ந்திருந்தது. அனேகம் பேர் ஓடுவதுபோல் காலடிச்சத்தம் கேட்டது. இருவரும் துரிதமாய்ப் பின் அறைக்கு ஓடினார்கள். சற்றுநேரம் உற்றுக் கேட்டார்கள். எல்லாம் நிர்ச்சந்தடியா யிருந்தது. கண்ணம்மாள் க்ஷேமமாக விருக்கிறளோ? என்று சிந்தித்துக்கொண்டே அவள் இருக்கும் அறையின்கதவைத் திறக்க முயன்றார்கள். முடியவில்லை. கதவின்பின் இன்னும் சாமான்கள் வைத்து அடைக்கப்பட் டிருந்ததுபோல் தோன்றியது.

கிருஷ்ணராவ் கதவின் சந்தில் வாயைவைத்துக் "கண்ணம்மாள் கண்ணம்மாள்" என்று கூவினான்.

உள்ளிருந்து "ஆ! நீயா கிருஷ்ணராவ்" என்று தாழ்ந்தகுரலாய்க் கேட்டது.

கிருஷ்ணராவ் "ஆம், நான்தான். நீ க்ஷேமமா யிருக்கிறாயா?" என்றான்.

பதில் ஒன்றும் வரவில்லை. ஆனால் உள்ளே கதவினருகிலிருந்து ஏதோ பளுவானசாமான்கள் இழுக்கப்படும் சந்தடி கேட்டது. கடைசியில் உட்பக்க மிருந்த தாழ்ப்பாள் கழற்றப்பட்டதும் கதவு திறக்கப்பட்டுக் கண்ணம்மாள் தடுமாற்றத்தோடு களைப்படைந்தவளாய் ஆனால் சுகமாகவே வெளியில் வந்து,

"ஆம். நான் சுகமாகவே யிருக்கிறேன். மருந்தின் போதைமட்டும் கொஞ்சம் இருக்கிறது. ஆயினும் என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். இன்னும் ஒரு விநாடியில் நான் சுகமடைந்து விடுவேன். மேல் மாடிக்குச் செல்லவேண்டும். அங்குத் தான் அம்மாது இருக்கிறாள் என்று நான் கருதுகிறேன்.—சரிதான் என்னைப்பற்றிக் கவனிக்கவேண்டாம். எனக்கொன்றுமில்லை. மேல்மாடிக்கு..." என்றாள்.

கிருஷ்ணராவ் அவள் தோளைப்பற்றி யழைத்துச்செல்ல முயன்றான். அவள் ஆயாசத்தோடு நாற்காலியில் சாய்ந்துவிட்டு "என்னைக் கவனிக்கவேண்டாம். தயவு செய்து துரிதமாய்ச் செல்லுங்கள் மேல்மாடிக்கு. காரியம் மிஞ்சிவிடலாகும்" என்றாள்.

கிருஷ்ணராவ் எவ்வளவோ தடை செய்தும் கண்ணம்மாள் கவனிக்காமல் மெதுவாயெழுந்து முன்னேயுள்ள கூடத்திற்குச் சென்றாள். மேல் மாடியிலிருந்து படிகளில் ஆள் இறங்கி வரும் சத்தம் கேட்டது. கிருஷ்ணராவ் என்னமோ கூற வா யெடுத்தான். அதற்குள் கண்ணம்மாள் "அதோ அம்மாது—மேல் மாடியில் ஒளிந்துகொண்டிருந்தவள். அதோ போய் விடுகிறாள்" என்றாள்.

ஒருமாது இவர்கள் பின்பக்கமிருக்கும் சமயந்தான் தான் தப்பியோடிவிட அனுகூலமான காலமென்று கருதித்

துரிதமாய்ச் சென்றாள். அச்சமயம் அக்கதவு திறக்கப்பட்டிருந்ததால் அவள் வீதியில் பிரவேசித்தாள். வீதியில் எரிந்து கொண்டிருந்த தீபவொளி அவள்மேல் நன்றாய் வீசியது.

ஜெகநாதன் அவள் மரகதமாயிருப்பாளென்று எண்ணி நோக்கினான். அவன் மிக்க வியப்போடு நோக்கினான். அவள் மரகதமல்ல. மரகதத்தைவிட அவள் அழகாயிருக்கிறாள். அவள் முன் பின் அவன் பார்த்தவளல்ல. ஒரு சமயம் இரத்தினபாயாயிருக்குமோவென்று பார்த்தான். அவள் ஜாடையேயில்லை. இவள் இரத்னபாயிலும் வயது முதிர்ந்தவளாகவிருந்தாள். அவளைவிட மெல்லிய தேகமுடையவள். அவள் உருவத்திற்கும் இவள் உருவத்திற்கும் சம்பந்தமேயில்லை.

அம்மாதின் முகத்தில் ஏதோ கட்டுக் கட்டிக்கொண்டிருந்தாள். அக்கட்டில் இரத்தக்கறைகளிருந்தன. அதனால் அவளுக்குச் சமீபகாலத்தில் காயம்பட்டிருக்கவேண்டுமென்று புலப்பட்டது. அவள் கலவரத்தோடு ஓடி வந்ததால் அந்தக் கட்டு தளர்ந்திருந்தது. அவள் இவர்களைப் பார்த்து விட்டதும் இவர்கள் நெருங்குவதைக்கண்டு துரிதமாய்ச் செல்ல முயன்றாள். முன்னமே தளர்ந்துபோயிருந்த கட்டு அவள் முகத்திலிருந்து நழுவிக் கீழே விழுந்து விட்டது. அப்போது அவள் முகம் முழுமையும் நன்றாகத் தெரிந்தாலும் அவள் அறிமுகமில்லாதவளாகவே தோன்றினாள். ஆயினும் அவன் உள்ளத்தில் அவளை யெங்கோ எப்போதோ கண்டதாகவே புலப்பட்டது. அவள் நழுவி விழுந்த அக்கட்டை யெடுக்க நிற்கவில்லை. இவர்கள் அவளை நிறுத்த நெருங்குவதற்குள் அவள் துரிதமாகச்சென்று முன் படிகளிலிறங்கி வீதியின் ஓரத்திலுள்ள பாதையில் பிரவேசித்தாள்.

ஹோட்டலிலுள்ளவர்களுக்கு ஆபத்து நேர்ந்து யாவரும் தப்பித்துக்கொண்டு ஓடுகிறார்கள் என்பதை யறிந்ததே அனேகம் வண்டிகள் அங்கு வந்து குழுமிவிட்டன. அச்சமயம் ஓடுகிறவர்கள் எவ்வளவு வாடகை வேண்டுமாயினும் கொடுப்பார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். அவ்வண்டிகளில் ஒன்றினருகில் நிழலில் ஒரு மனிதன் பதுங்கிக் கொண்டிருந்தான். அம்மனிதனும் உள்ளேயிருந்து வந்த மாதும் அவ்வண்டியில் ஏறிக்கொண்டார்கள். அம்மனிதன் டாக்டர் வீரப்பன்போலவே காணப்பட்டான். மறுநிமிடம் வண்டி போய்விட்டது.

போலீஸ் ஸார்ஜென்ட் சின்ன மாளிகையின் தெருவாயிற்படியில் காவல் நின்றவன் தன் பார்வைமுழுமையும் அதன்மேலேயே வைத்துக்கொண்டிருந்தான். வேறெதையும் அவன் கவனிக்கவேயில்லை. வீதியில் அனேகம் பேர் கும்புகூடி விட்டார்கள். சின்னமாளிகையிலிருந்து பல வழிகளில் தப்பியோடுகிறவர்கள் வெளியில் வந்ததும் வீதியிலுள்ள ஜனக்கூட்டத்தில் கலந்து கொள்வதால் சுலபமாய்த் தப்பித்துக்கொள்ள மிக்க அனுகூலமாக விருந்தது.

கிருஷ்ணராவ்:—"இப்போது ஒருவரையேனும் சிறைப்படுத்த முயல்வதில் பிரயோசனமில்லை. நான் அப்படி யெதிர் பார்க்கவேயில்லை. நான் கருதியதெல்லாம் கூடி கண்ணம்மாளைக் காப்பாற்றவேண்டுமென்பதே. இப்போது இந்த வீட்டை மூடிவிடவேண்டியதற்குப் போதுமான அத்தாக்ஷி நமக்குக் கிடைத்துவிட்டது" என்று கூறிக்கொண்டே, முன்பு வெளிச் சென்றமாது கீழே நழுவி விட்டுவிட்ட கட்டுச்சீலையை யெடுத்துக்கொண்டான்.

ஜெகநாதன் அது எத்தகைய காயத்திற்குக் கட்டப் பட்டதோ வென்றான். கிருஷ்ணராவ் அவன் அதை யேன்

அணிந்துகொண் டிருக்கிறளோ அதை யறியவேண்டும். இதை நான் வைத்துக்கொண் டிருந்து யோசிக்க விரும்பு கிறேன்" என்றான்.

கண்ணம்மாள்:—"அவள் அங்கே மேலே யிருப்பாளென்று நம்புகிறேன். நீங்கள் வர ஒருவிநாடி யிருக்கும்போது அவர்கள் அங்குப் பேசிக்கொண் டிருந்தார்கள்" என்றாள்.

கிருஷ்:—" சரி, மேல்மாடிக்குச் செல்வோம் " என்றான்.

உடனே மூவரும் மேல்மாடிக்குச் சென்றார்கள். எங்கும் இருள் சூழ்ந்திருந்ததால் ஒவ்வொரு அறையிலும் விளக்கேற்றிப் பார்த்தார்கள். எல்லா அறைகளும் காலியாகவே யிருந்தன. ஆனல் ஒவ்வொன்றிலும் சீட்டா, செண்டு முதலியவை பிடிக்கும் அடையாளங்கள் ஏராளமாக விருந்தன. அதாவது, அவைகளுக்காக உபயோகப் படுத்தப்படும் குழாய்களும் சுங்கான்களும் மற்ற அடையாளங்களும் இருந்தன.

கடைசியில் மேல்மாடியின் முனையிலிருந்த ஒரு அறையில் ஒருபெண் இருந்தாள். அவள் பாதி ஸ்மரணையற்ற நிலைமையி லிருந்தாள். அவள் வீதிக்குச் செல்லத் தன்னலான வரையில் முயன்றுகொண் டிருக்கிறள். பாபம் அவளால் முடியவில்லை. இவர்கள் மறுபடி அவள் மரகதம் அல்லது காணமற்போன இரத்னபாயாக விருக்குமென்று கருதி மிக்க ஆவலோடு அவள் அருகிற்சென்று பார்த்தார்கள். ஆனல் அந்தோ! அவள் சின்னமாளிகையில் தாங்கள் கண்ட டெலிபோனில் வேலைசெய்யும் பெண் என்பது தெரிந்தது.

கண்ணம்மாள் அப்பெண்ணுக்கு மெதுவாகத் தேறுதல்கூற முயன்றாள். அப்பெண் மிக்க போதையி லிருந்தாலும் இவர்களை யாரென் றுணர்ந்துகொண்டதோடு ஏதோ

கெடுநி சம்பவித் திருக்கிறதென்று அறிந்துகொண்டாள். ஆகையால் நாணத்தாலும் பீதியாலும் அழத்தொடங்கினள்.

கண்ணம்மாள்:—“பாபம் இப்பெண்கள்மேல் கோபிப்பதில் பயனில்லை. இவர்கள் இம்மாதிரிகெட்டவழியில் இழுக்கப்பட்டு விட்டார்கள். இப்பெண்ணை யிச்சமயம் ஆதரித்து, இவள் தான் செல்லும் மார்க்கம் அபாயகரமான தென்று உணரும்படிச் செய்ய வேண்டும். இதுவே நாம் செய்யவேண்டியது” என்றாள்.

கிருஷ்ணராவ் ஜகநாதனைநோக்கி, “ஜெகநாதம்! தயவு செய்துபோய் ஒரு வண்டி பேசிக்கொண்டு வா. இனி நாம் இங்குச் செய்யத்தக்கது ஒன்றுமில்லை. எல்லாரும் தப்பித்துக்கொண்டு போய்விட்டார்கள். நாம் இப்பெண்ணை யொரு தக்க இடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். பலர் சொந்தமாய் வைத்துக்கொண் டிருக்கும் சுகசாலைகளில் ஒன்றில் இவளைக் கொண்டுபோய் விட்டுவிட வேண்டும்” என்றான்.

கண்ணம்மாள் சட்டென்று உள்ளே சென்று இரண்டொரு நிமிடங்களில் தன் மேல் உடை போர்வை முதலிவற்றோடு திரும்பிவந்து “நான் இவளோடு கூடச்செல்கிறேன்” என்றாள்.

கிருஷ்:—“என்ன? நீயா இவள் கூடப்போகப்போகிறாய்?” என்றான்.

கண்ணம்மாள்:—“ஆம். இவளுக்கு இப்போது சரியான உதவிவேண்டும். நான் இவளையழைத்துப்போய் இவள் புத்தி பூரணமாய்த் தெளிவடையுமட்டும் வைத்திருந்து தேற்றியனுப்ப வேண்டும்” என்றாள்.

அப்பெண் இவர்கள் பேசுவதை யுணர்ந்து கொண்டாள். கண்ணம்மாள் கூறுவதன் கருத்தை யவள் உணர்ந்து தன் நன்றியறிதலை யறிவிப்பவள்போல் சமிக்கைசெய்தாள்.

அதற்குள் ஜெகநாதன் வண்டி கொண்டுவந்துவிட்டான். கண்ணம்மாள் அப்பெண்ணை வண்டியி லேற்றிக்கொண்டு புறப்படும் சமயம் கிருஷ்ணராவ் கண்ணம்மாள் தோளைப் பற்றிச் சற்று எட்ட அழைத்துக் கொண்டுபோய் "நீ மிக்க கருணைபொருந்திய குணமுடையவள். உன்போன்ற யோக்கியமான பெண்கள் அத்தகைய பெண்ணைத் தீண்டவும் அஞ்சி எட்டப்போய் விடுவார்கள். நீ இவளை யெங்கழைத்துச் செல்ல உத்தேசிக்கிறாய்?" என்றான்.

அதன் பிறகு இருவரும் சற்றுநேரம் கலந்து பேசிய பின் நகரத்தின் நிம்மதியான ஓர் பாகத்திலுள்ள ஒரு வீட்டிற்கு அப்பெண்ணை யழைத்துச் செல்வதென்று முடிவு செய்தார்கள். அதன்மேல் கிருஷ்ணராவ் கண்ணம்மாளை நோக்கி "கண்ணம்மா! நீ இப்பெண்ணுக்கு உதவிசெய்வதோடு உன் துப்பறியும் வேலையையும் ஏககாலத்தில் செய்யலாகும். நீ மனம்வைத்தால் செய்யலாகும்" என்றான்.

கண்ணம்மாள்:—"எப்படி யதையும் செய்வது?" என்றாள்.

கிருஷ்:—"எப்படிச் செய்வதா? கூறுகிறேன். நீ இப்போது இப்பெண்ணுக்குப் பெரிய உதவிசெய்யப் போகிறாய். இவளும் உன்போல் பெண்பிள்ளையே. நன்றியறியும் குணமுடையவள். இவள் இச் சின்னமாளிகையில் கொஞ்சக்காலமாக இருந்து வருகிறாள். இங்கு நடக்கும் இரகசியமனைத்தும் இவளுக்குத்தெரியும். எல்லாம் தெரியாவிட்டாலும் பெரும்பாலானவை தெரியும். ஆகையால் நீ தனக்கு எத்தகைய உதவிசெய்தாய் என்பதை யவள் அறிந்தால் உன் விஷயத்தில் நன்றியுள்ளவளா யிருப்பாள். நீ தந்திரமாய் இங்கு நடக்கும் சங்கதிகளை யெல்லாம் அவளிட மிருந்து கிரகித்துக் கொள்ளலாம். இது நீ நமது விவகாரத்திற்கு நல்ல உதவிசெய்யக்கூடிய சந்தர்ப்பம். இதில் நீ பக்குவ

மாய் நடந்துகொண்டால் மிக்க அனுகூல முண்டாகும். அவள் மூலமாய் இரத்னுபாயின் விஷயத்தைப் பற்றி யேதேனும் அறியலாகும். அச்சின்னமாளிகையில் நடக்கும் அந்தரங்க இரகசியங்களில் அனேகம் இவளுக்குத் தெரிந்தேயிருக்கும்" என்ருன்.

கண்ணம்மாள் அப்பெண்ணை யழைத்துச் சென்றதே, ஜெகநாதனும் கிருஷ்ணுராவுங் கூடப் புறப்பட ஆயத்தமானுர்கள். அச்சமயம் அந்தச் சின்னமாளிகையில் வேலை செய்யும் ஒரு நீக்ரோமாது அவர்கள் எதிரில் வந்தாள். அவள் வெளியிலிருந்தபடி நடந்த குழப்பத்தை யெல்லாம் பார்த்துக்கொண் டிருந்தாள்.

கிருஷ்ணுராவ் அவளை யுற்றுநோக்கி "இப்போது இங்கிருந்து வெளியிற் சென்ருளே, அப்பெண்ணின் பெயர் உனக்குத் தெரியுமா?" என்ருன். அவள் "அய்யா! எனக்குத் தெரியாது" என்ருள்.

கிருஷ்ணுராவ் "ஓ மாதே! என்னிடம் மறைத்துப் பேசாதே. இப்பெண் இங்கு வேலை செய்துகொண் டிருக்கிருள் என்பது உனக்கு நன்ருகத் தெரியும். நீ யித்தகைய விடத்தி லிருப்பதற்காக உன்னையும் பிடித்துப்போக வேண்டியதே நியாயம். நான் பிடித்துக்கொண்டால் எத்தனை மங்கம்மாள், மரகதம்மாள் சேர்ந்தாலும், எத்தனை ஈட்டித்தானன் சேர்ந்தாலும் யாராலும் உன்னை மீட்டுக்கொள்ள முடியாது. அதைமட்டும் நன்ருக அறிந்துகொள். இப்பெண்ணின் பெயரென்ன கூறு சீக்கிரம்" என்ருன்.

அந்த நீக்ரோமாது சற்றுநேரம் சிந்தித்தாள். இவன் கூறுவது வீண் மிரட்டல்ல வென்று தெரிந்து கொண்டாள். அதன்மேல் அவள் "அந்த அம்மாளைச் செல்வநாயகி யென்று இங்குள்ளவர்கள் கூப்பிடுகிருர்கள்" என்ருள்.

கிருஷ்ணுராவ் "சரி, மிக்க வந்தனம். நீ போகலாம்"

என்றான். அவள் சென்றதும் ஜெகநாதனை நோக்கி "சரி. நல்ல சோதனை. ஆனால் ஒரு ஆளைக்கூடச் சிறை செய்ய வில்லை. ஆயினும் இங்கு நடந்த குழப்பம் இன்னும் அரை மணிக்குள் எங்கும் தெரிந்துவிடும். ஆகையால் நாம் செய்யவெண்டிய வேலையைத் துரிதமாய்ச் செய்யவேண் டும். புறப்படு சீக்கிரம்!" என்றான்.

உடனே இருவரும் புறப்பட்டு நேராய்க் கருணாகரம் பிள்ளையிடம் சென்று பல ஆட்களையனுப்பித் துறைமுகங் களிலும் இரயில் ஸ்டேஷன்களிலும் வேவு பார்த்து அகப் படுகிறவர்களைப் பிடிக்கும்படி இரவு முழுதும் பெரு முயற்சி செய்தார்கள். ஒருவரும் அகப்படவில்லை. டாக்டர் வீரப் பன், மரகதம்மாள் இவர்கள் எப்படியோ மறைந்து விட்டார் கள். இரத்னபாயைப்பற்றி யொன்றுமே தெரியவில்லை.

17—வது அத்தியாயம்,

சின்ன மாளிகை சோதனை செய்யப்பட்டதிலிருந்து துர்க்கையன் பலம் முறிந்து விட்டதென்று தெரிந் தது. கருணாகரம் பிள்ளை ஆலசியமின்றி எதிரிகளின் தற்காப்புக்குச் சற்றேனும் அவகாசம் கொடாமலே மர்ம மாய் வேலை செய்தது அச்சமயம் அவர்களைத் தப்பித்து விடச் செய்தது. கருணாகரம்பிள்ளை வக்கீல் கனக சபையின் மேல் முன்னமே குற்றச் சாட்டு கொண்டு வருவதற்கு வேண்டிய முயற்சிகளை யெடுத்துக்கொண்டார். நடந்த சங் கதிகளைக் கேட்டதே மதுரைநாயகம் பிள்ளையும் இடி விழுந்த வன்போ லாய்விட்டான். அவன் மனக்கலக்கத்தை மறக்க அதிகமாய்க் குடிக்கத் தொடங்கி யிருக்கிறான் என்று கருணா கரம்பிள்ளையின் ஆட்களில் சிலர் கூறினார்கள்.

துர்க்கையன் தான் மறைவிலிருந்துகொண்டு அன்னி

யார் மூலமாகவே வேலை செய்யத் தொடங்கினன். முன்பு தன்னுடைய அறையில் கள்ள டெலிபோன் வைக்கப்பட்டது முதல் அவன் தன் அறையை மிக்க ஜாக்கிரதையோடு சோதனை செய்து மறுபடி யவ்வாறு நடக்காவண்ணம் செய்ய மிக்க எச்சரிக்கை யெடுத்துக்கொண்டான். கறுப்புப் புத்தகம் யாரிடம் அகப்பட்டுக்கொண் டிருக்கிறதோ அவர்கள் அதை மிக்க இரகசியமாகவே வைத்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் கடைசியாக அதையும் யுபயோகிக்கும் வரையில் அவனைப் பயப்படுத்தி வைக்க அவ்வாறு செய்கிறார்களென்று கிருஷ்ணராவ் கருதினன். துர்க்கையனுக்கும் இலக்ஷ்மணசாமியின் கட்சிக்கும் என்ன நடக்கிறதென்று ஒன்றும் தெரியவில்லை.

கடைசியில் யாவும் தெரியவேண்டிய காலம் வந்து விட்டது. அதாவது ஜட்கா சுப்பனுக்கு நியாயாதிபதி தண்டனை விதிக்கும் நாளாகிய வெள்ளிக்கிழமை வந்து விட்டது. சுப்பனைச் சேர்ந்த கட்சியாருக்கும் அவனைப்போன்ற துஷ்டர்களுக்கும் பெருந்திகிலாகவே யிருந்தது. ஏனெனில் நியாயாதிபதி அவன்மேல் சாட்டப்பட்ட குற்றங்களைச் சாமானியமாக வெடுத்துக்கொண்டு கொஞ்சம் அபராதம் விதிப்பதாகிய சொல்ப தண்டனையளித்தால் பரவாயில்லை. அதனல் அவனுக்கும் பின்னல் கெடுதி நேராது. அப்படிக்கின்றி அவன் பெரிய குற்றம் செய்ததாக எடுத்துக்கொண்டு சிறைவாசம் போன்ற பலத்த தண்டனை விதித்து விட்டால் மிக்க கெடுதியாகும். அதனல் அக்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் மிக்க திகிலோடு முடிவை யெதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

வக்கீல்களெல்லாம் வந்திருந்தார்கள். கனகசபைப் பிள்ளையின்மேல் கருணகரம்பிள்ளை நடவடிக்கை யெடுத்துக்கொண்டதால் அவன் சுப்பனுக்காக வேறு வக்கீல் நியமித்து

விட வேண்டியதாயிற்று. அந்த வக்கீல் கனகசபைப் பிள்ளையைப்போல் தந்திர சாமார்த்தியங்கள் வாய்ந்தவனல்ல. ஆனால் நேர்மையான நடக்கையுடையவன். அவன் தன் கட்சிக்காரன் குற்றம் செய்யவில்லையென்று வாதாடவில்லை. நியாயாதிபதியவர்கள் தயவு காட்டவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டான். அதைக் கேட்டதே ஜட்கா சுப்பனும் அவனைச் சேர்ந்தவர்களும் மிக்க வெறுப்படைந்தார்கள்.

வக்கீல் அவ்வாறு பிரார்த்தித்துக் கொண்டபோதிலும் நியாயாதிபதியாகிய பிரேமநாதர் முகத்திலிருந்த நிர்த்தாக்ஷண்யமும் தீக்ஷண்யமுமான தோற்றமும் சற்றும் மாறுதலடையவில்லை. கருணாகரம்பிள்ளை கூறியவற்றையும் அவ்வாறே தான் கேட்டுக் கொண்டிருந்தார்.

கடைசியில் நியாயாதிபதி தீர்ப்பையளிக்கத் தொடங்கி முன்னே குற்றவாளியின் வக்கீல் கருணை காட்டவேண்டும் என்பதற்குக் கூறிய காரணங்களையெல்லாம் இரண்டொரு வாக்கியங்களால் உதறித் தள்ளிவிட்டுத் தம் முன் நிற்கும் குற்றவாளியாகிய ஜட்கா சுப்பனை நோக்கிப் பின் வருமாறு கூறத்தொடங்கினார்:—

“உன் நாட்டாரும் உன்னிலும் மேலானவர்களுமாகிய பன்னிருவர் நீ குற்றவாளியே யென்று கூறிவிட்டார்கள். உண்மையில் யோக்கியனான ஒவ்வொருவனும் உனக்கு மேலானவனே. இன்னும் இதற்கு முன்பே துரைத்தன வக்கில் உன் விவகாரங்களை முற்றும் நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்து உன்மேல் குற்றம் சாட்டப் போதுமான ருசுவுகள் இருக்கின்றனவென்று தீர்மானித்திருக்கிறார். என் மனதில் முன்னாடி நீ குற்றவாளியென்ற அபிப்பிராயமில்லை. இப்போது ஜூரர்களும் நீ குற்றவாளியே யென்று கூறிவிட்டார்கள். நீ செய்திருக்கும் குற்றங்கள் உன் வயதிற்கு

இரண்டத்தனை வயதுள்ளவனையும் அவமானப் படுத்தப் போதுமானவை. நீ இது வரையில் தண்டிக்கப்படவில்லை யென்பது உண்மையே. உன்னை முன்னமே தண்டிக்காமல் விட்டு விட்டதற்காக என் சகாக்களாகிய நியாயாதிபதிகள் மேல் குறை கூற இது சமயமுமல்ல. இடமுமல்ல. நீ பன் முறை செய்துவிட்டுத் தப்பித்துக்கொண்டிருக்கும் குற்றங் களுக்கும் குறைந்த குற்றம் செய்த உன் கூட்டாளிகளில் பலர் சிறைவாசம் அனுபவித்திருக்கிறார்கள். அவர்களில் சிலரை இந் நீதிச்சபை முன் காண நான் சந்தோஷப்படு வேன்" என்று கூறி ஒரு விநாடி குற்றவாளியை யுற்று நோக்கி, "ஓ! குற்றவாளியே! உன் குற்றம் அபாரமானது. நீ ஜன சமூகத்தின் அஸ்திவாரத்திலே நஞ்சூட்டி விட்டாய். மந்திராலோசனைச் சபைக்கு அவயவிகளைத் தெரிந்தெடுப் பதிலுள்ள நீதியை யடியோடு கெடுத்துவிட்டாய். நீ செய்த குற்றங்கள் துரைத்தனம் சீராக நடப்பதற்கே மிக்க இடையூ றுண்டாக்கத் தக்கவை. யாவற்றையும் கருதி நீ கடின உழைப்போடு ஐந்து வருட இராஜாங்கச் சிறைவாசம் செய் யும்படி நான் உனக்குத் தண்டனை யளிக்கிறேன்" என்று கூறி முடித்தார்.

இத்தண்டனையைக் கேட்டதே ஜட்கா சுப்பன் ஆட் களுக்கெல்லாம் மூச்சு நின்றுவிட்டது. தங்கள் கூட்டத் தின் முதுகெலும்பே யுடைந்து விட்டதுபோல் அவர்களுக் குத் தோன்றியது. குற்றவாளி யுடனே சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டான். அதன் பிறகு சபையிலிருந்த ஜனங்களெல்லாம் மெதுவாய் எழுந்து செல்லத் தொடங்கி னார்கள். அவர்கள் "அய்யய்யோ! ஜட்காசுப்பன் மதுரை நாயகம் பிள்ளையின் வலக்கை போன்றவனே—இராஜாங்கச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டான். இனி மற்றபேர் கதி..." என்று குசுகுசுவென்று பேசிக்கொண்டார்கள்.

நீதிச் சபைக்கு வெளியில் கருணாகரம் பிள்ளையிடம் யாவரும் சந்தோஷங் கொண்டாடினார்கள். அவர் பத்திரிகை யாசாமிகளிடம் சிக்காமல் துரிதமாய் நழுவி விட்டார். கிருஷ்ணாராவே முதல் முதல் அவர் கரத்தைப்பற்றிக் குலுக்கினான். அதன் பிறகு அழகாம்பாள் இரண்டு மூன்று நண்பர்களோடு வந்து யாவரைக்காட்டிலும் மிக்க சந்தோஷத்தை வெளியிட்டாள்.

அவள் கருணாகரம்பிள்ளையை நோக்கி, "நான் உண்மையாகவும் மனப்பூர்வமாகவும் தாங்கள் அடைந்த ஜெயத்திற்காகவும், இதனால் தங்களுக்குக்கிடைக்கும் கீர்த்திக்காகவும் மிக்க சந்தோஷ மடைகிறேன். அதோடு இது காணமற்போன அந்த இரத்னபாயின் விஷயத்தோடு சம்பந்தப்பட்டதாகவே யிருக்கும். ஆயினும் இதுகாறும் அவளைப் பற்றி ஒரு சங்கதியும் கண்டு பிடிக்கவில்லை. அவள் மாய மாய் மறைந்துபோய் விட்டிருக்கிறாள்" என்றாள்.

கருணாகரம்பிள்ளை:— "அவளை யெப்படியேனும் கண்டு பிடிக்கவேண்டும். நான் சீக்கிரத்தில் ஜட்காசுப்பனைப் போய்ப்பார்த்து அவன்மூலமாய் ஏதேனுமறிய முயல்கிறேன். ஆயினும் அவன் அப்படிச் சுலபத்தில் சங்கதியை வெளியிடுகிற ஆளல்ல. எதற்கும் நாம் ஒரு கை பார்ப்போம். சீக்கிரத்தில் ஏதேனும் சங்கதி கிடைக்குமென்றே நான் கருதுகிறேன்" என்றார்.

அதற்குள் அனேகர் கருணாகரம்பிள்ளையை நெருங்கி வரத் தொடங்கினார்களாதலால் அழகாம்பாள் எட்டச் சென்றாள். அவள் சென்றபின் அவர் மற்ற பேரை வரவேற்பதிலுள்ள சந்தோஷங் குறைந்து விட்டது. ஜகநாதன் அங்கிருந்த கூட்டத்தை நன்றாக நோக்கியபோது, ஒரு தூணினருகில் இலக்ஷ்மணசாமி பிள்ளை நின்றிருப்பதைக் கண்டான். அவன் இவர்களையே யுற்றுநோக்கிக் கொண்டிருந்

தான். அவன் முகத்தில் மிக்க வெறுப்பு தோன்றியது. அவனுக்கு நடந்த விஷயங்கள் சந்தோஷமாயில்லை. அதிலும் கருணாகரம் பிள்ளைக்குப் புகழ்ச்சி கிடைத்தது அவனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. இரண்டொரு நிமிடங் கழித்து ஜெகநாதன் தன்னை நோக்குவதைக் கண்டு சட்டென்று கீழேயுள்ள தாழ்வாரத்திற்குச் செல்லும் படிகளில் இறங்கி விட்டான்.

மதுரைநாயகம் பிள்ளையாவது துர்க்கையனாவது அங்கில்லை. ஆனால் அவர்களுடைய வேவாட்கள் அங்கு வந்திருப்பார்களென்றும், உடனுக்குடன் நீதிச் சபையில் நடக்கும் சங்கதிகளனைத்தும் அவர்களுக்கு ஒன்று விடாமல் எட்டுமென்றும் ஜெகநாதன் முதலியவர்கள் நன்கறிவார்கள். அழகாம்பாள் கருணாகரம் பிள்ளையிடம் சந்தோஷம் கொண்டாடியது கூட அவர்களுக்கு அறிவிக்கப்படுமென்றும், அவர்கள் தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காகக் கருணாகரம் பிள்ளைக்கு எத்தகைய தீங்கையேனும் செய்யத் துணிவார்களென்றும், அழகாம்பாளைக் கருணாகரம்பிள்ளை வசப்படுத்திக் கொண்டதே யவர்களுக்கு அவர்மேல் மிக்க குரோதத்தை யுண்டாக்குமென்றும் ஜெகநாதன் மனதிற்குப் புலப்பட்டது.

கருணாகரம் பிள்ளைக்குத் துரைத்தன வக்கீலாக வேலை செய்ய வேண்டியதிருப்பதோடு தமது கட்சிக்காக செய்ய வேண்டிய வேலைகளும், எதிர்க்கட்சிக்காரர் ஜெயமடையாது தடுக்க வேண்டியதற்கு முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டிய வேலைகளும் உள்ளன.

கருணாகரம்பிள்ளை கிருஷ்ணராவை நோக்கி, "இன்று அதிகமாய் உங்களை நான் கண்டு பேச முடியாதென்று அஞ்சுகிறேன். இன்று மாலை அழகாம்பாள் நடத்தும் விருந்திற்கும் நடனத்திற்கும் நீங்கள் செல்கிறீர்களல்லவா?" என்றார். கிருஷ்ணராவ் "செல்லவே விரும்புகிறேன்" என்றான்.

கருணாகரம்பிள்ளை சமீபத்தில் யாரேனுமிருக்கிறார்களா வென்று பார்த்துவிட்டு "நீங்கள் செல்வதுதான் நலம். அழகாம்பாள் இலக்ஷ்மணசாமியையும் அவசியம் வரும்படி கேட்டுக்கொண்டிருக்கிறாள். அவன் வருவதாய் வாக்களித்திருக்கிறான். கட்சித்தலைவர்களெல்லாம் அங்கு வருவார்கள். அங்கு நடைபெறப்போவது கட்சிபேத விருந்தே. இத்தகைய சமயத்தில் யாவருமே வருவார்கள். வாராமற்போவோர் விரோதிகள் என்று அர்த்தம். இச்சமயம் நாம் அவசியம் செல்லவேண்டும். ஏனெனில் அவர்களில் வேவு பார்க்க வருகிறவர்கள் யார் என்பதையும் இன்னும் சில விஷயங்களையும் அறிந்து கொள்ளலாம்" என்றார்.

கிருஷ்ணாராவ் "ஆகா! நாங்கள் வருகிறோம். ஏன் நாம் மூவரும் ஒன்றாய்ச் சென்றாலோ?" என்றான். கருணாகரம் பிள்ளை "ஆகா, மிக்க சந்தோஷம். நீங்கள் என் காரியாலயத்திற்கு வாருங்கள். நான் ஆயத்தமாயிருக்கிறேன். என் விஷயத்தில் நீங்கள் செய்யும் உதவிக்காக மிக்க வந்தனம்" என்றார்.

அதன் பிறகு கிருஷ்ணாராவும் ஜெகநாதனும் நீதிச் சபையிலிருந்து வெளியிற்செல்லும் கூட்டத்தோடு மெதுவாய்ச் சென்றார்கள். இருவரும் வீதிக்குச் செல்லும் படிகளிலிறங்கும்போது கிருஷ்ணாராவ் ஜெகநாதன் புயத்தைச் சீண்டினான். ஜகநாதன் சட்டென்று கிருஷ்ணாராவின் பார்வை செல்லும் இடத்தை நோக்கியபோது ஒரு மாது வீதியில் ஒரு வண்டியில் ஏறுவதைக்கண்டான். அவள் உருவம் முன்புகண்ட உருவம்போல் தோன்றியது. ஆயினும் அவள் முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டிருந்ததால் ஜகநாதன் அவளை யாரென்றறியக்கூடவில்லை.

அதற்குள் கிருஷ்ணாராவ் "அவள் உபயாம்பாள். நாம் நீதிச் சபையில் அவளைக் காணவில்லை. ஆயினும் அவள்

186531

அங்கு வந்தே யிருப்பாள். அவளுக்கு இதில் ஏதோ அக்கறை யிருக்கவேண்டும்" என்றான். ஜெகநாதனுக்கும் அப்போது அவள் உபயாம்பாளே யென்பது தெரிந்தது. அவள் ஏறிய வண்டியில் வேறு யாரேனு மிருக்கிறார்களா என்று பார்ப்பதற்குள் அந்த வண்டி வேகமாய் அங்கிருந்து புறப்பட்டுப் போய் விட்டது.

ஜெகநாதன் "அவள் ஏன் இங்கு வந்தாள்?" என்று கிருஷ்ணராவைக் கேட்டான். கிருஷ்ணராவ் தலையசைத்தானேயன்றித் தன் மனதிலுள்ள அபிப்பிராயத்தை யின்னதென்று வெளியிடவில்லை. அக்கறுப்புப் புத்தகத்தினாலுண்டான பயத்தால் அவள் அங்கு வந்திருப்பாளென்று ஜெகநாதன் எண்ணிக்கொண்டான். "ஒரு சமயம் மதுரைநாயகம் அப்புத்தகத்தை இலக்ஷ்மணசாமிப் பிள்ளையிடமிருந்து களவாடிக்கொண்டு வரும்படி தன் ஆளாகிய ஜட்கா சுப்பனையேவினான் என்று அவள்கூட ஊகித்துக் கொண்டாளோ? இந்த ஜட்கா சுப்பன் ஆத்திரத்தால் ஒரு சமயம் அதைப் பற்றி நீதிச் சபையில் வெளியிட்டு விடுவானென்று அஞ்சியே யங்கு வந்தாளோ" என்றும் ஜெகநாதன் சிந்தித்தான்

மறுவிநாடி ஜெகநாதன் கிருஷ்ணராவின் தோளைச்சீண்டிச் சற்று தூரத்தில் கட்டிடத்தின் திருப்பமூலையில் ஒரு ஆள் நின்றுகொண் டிருப்பதைக் காட்டினான். ஜெகநாதன் பக்கவாட்டாய் நின்றிருந்ததால் அங்கு நிற்கும் ஆளைப்பார்த்தான். கிருஷ்ணராவ் நன்றாகத் திரும்பினால்தான் அவனைக் காணமுடியும். ஜெகநாதன் கிருஷ்ணராவை நோக்கி மெதுவாய் "சட்டென்று திரும்பாதே, உனக்கு நேராகப் பின் பக்கம் இலக்ஷ்மணசாமி நின்றுகொண் டிருக்கிறான். அவனும் உபயாம்பாளைப் பார்த்துக்கொண் டிருந்தான் என்பது தோன்றுகிறது" என்றான்.

கிருஷ்ணாராவ் சுருட்டு பற்றவைப்பவன்போல் நெருப்புக்குச்சி யெடுத்துக்கிழித்து அதைக் கீழே விட்டுவிட்டுப் பிறகு எடுப்பவன்போல் ஜாடையாய்த் திரும்பினான். ஆயினும் அதற்குள் இலக்ஷ்மணசாமி இவர்களைப் பார்த்துவிட்டானதலால் சட்டென்று போய்விட்டான்.

அதன்பிறகு கிருஷ்ணாராவ் ஒன்றும் பேசாமல் அருகிலிருந்த சந்தின்வழியாய்த் திரும்பித் தனது இரசாயன சாலையிருக்கும் திக்கைநோக்கி நடந்தான். ஜெகநாதனும் அவன் கருத்தையறிந்து கூடவே சென்றான்.

இருவரும் கிருஷ்ணாராவின் இரசாயன சாலைக்குச் சென்றபின் அன்றுபகல் முழுமையும் கிருஷ்ணாராவ் ஜாதிக்காய் பலகையால் செய்யப்பட்ட இரண்டு பெட்டிகளைப் போன்ற கருவிகளைச் செய்துகொண் டிருந்தான். ஜெகநாதனை வளையக்கூடியதும் மேலே பட்டால் மூடப்பட்டதுமாகிய நூறடி நீளமுள்ள, கம்பி வாங்கிவரும்படி யனுப்பினான்.

ஜெகநாதன் கம்பிவாங்கிவந்ததும் கிருஷ்ணாராவ் அதைப் பார்த்துச் சரி போதும் என்று கூறி அதையும் தான்செய்த கருவிகளையும் வெவ்வேறாகச் சிப்பம்செய்து பெட்டிகளைத் தான்வைத்துக்கொண்டு கம்பியை ஜெகநாதனிடம் அளித்து "இனி நாம் கருணாகரம் பிள்ளையினிடம் செல்வோம்" என்றான்.

அப்போது அவ்வளவாக நேரமாகா விட்டாலும் கருணாகரம்பிள்ளை இவர்களுக்காக மிக்க ஆவலோடு காத்துக்கொண்டிருந்தார். அவர் இவர்களைப் பார்த்ததும், "நான் இரசாயன சாலையிலும் வீட்டிலும் கூப்பிட்டுப் பார்த்தேன். உங்களை யெங்கும் காணோம். எங்குச் சென்றிருந்தீர்கள் ?" என்றார்.

கிருஷ்ணாராவ் " நாங்கள் அக்கிழக்கு வீதிக்குச் சென்

திருந்தோம். ஏன்? என்ன சமாசாரம்? ஏதேனும் விசேஷமுண்டோ?" என்றான்.

கருணாகரம்பிள்ளை: — "ஓ! அப்படியானால் உங்களுக்குச் சங்கதி தெரியாதோ? மதுரைநாயகம் பிள்ளை பைத்தியக்கார வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறான்" என்றார்.

இதைக்கேட்டதே இருவரும் பிரமித்து விட்டார்கள். கிருஷ்ணராவ் "என்ன? மதுரைநாயகம் பைத்தியக்கார சாலையிலா?" என்றான். கருணாகரம்பிள்ளை "ஆம். புத்தி சபலத்தால் சுவாதீனம் இழந்து விட்டதாகக் கூறப்படுகிறது," என்றார்.

இரண்டொரு தினங்களாக நடந்த விசேஷங்களின் மேல் இதுவும் நேரிடவே யாவர்க்கும் வியப்புண்டாய் விட்டது. இதென்ன இவன் பாசாங்கு செய்கிறானு? அல்லது கருணாகரம் பிள்ளையின் நடவடிக்கைகளால் அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிட்டதா என்று எங்கும் குழப்பமுண்டாய் விட்டது.

அன்று அழகாம்பாள் வீட்டில் நடந்த விருந்தின்போது இச்சங்கதியே யெல்லார் வாயிலுமிருந்தது. இத்தகைய சந்தர்ப்பத்தில் வழக்கம்போல் அவரவர்கள் தத்தம் உத்தேசம் போல் பேசத்தொடங்கினர்கள். பலபேர் பலமாதிரி கூறத் தொடங்கினர்கள். துர்க்கையனே அவனுக்கு ஏதோ செய்து விட்டான் என்பது அனேகர் அபிப்பிராயம். அது மெய்யோ பொய்யோ எப்படியாயினும் துர்க்கையன் என்னமோ தனக்கு விரோதிகளிருக்கப் பார்த்துக்கொண்டிருக்கிறவனல்லவென்பது உண்மை. அவனுக்கும் இலக்ஷ்மணசாமிக்குமுள்ள விரோதத்தின் மூலகாரணம் அதுவே.

அழகாம்பாள் வைத்த விருந்திற்கு எல்லாவிதமானவர்களும் வந்திருந்தார்கள். அவள் மாளிகையிலுள்ள விசால

மான போஜனகூடத்தில் விருந்து நடந்தது. துர்க்கைய னும் அழைக்கப்பட்டான். ஆனால் அவன் தன்னால் கூடிய வரையில் பகிரங்கத்தில் செல்லாமல் தப்பித்துக் கொள்வது வழக்கம். அதன்படி அவன் வரவேயில்லை. இலக்ஷ்மண சாமிப்பிள்ளை வந்திருந்தான். அவன் ஒருசமயம் தொழிலாளி களின் தலைவர்களோடு பேசிக்கொண் டிருந்தான். பிறகு நியாயாதிபதியாகிய பிரேமநாதரிடம் சம்பாஷித்துக் கொண் டிருந்தான். அவர் தன் ஆளாகிய ஜட்காசுப்பனைத் தண் டித்து விட்டது அவனுக்கு மிக்க கோபமாகவும் வெறுப் பாகவு மிருந்தாலும் பிறர் அதை யறிந்துகொள்ளாமலிருப்ப தற்கே, அவ்வாறு அபிநயம் செய்தான்.

அந்த விருந்தில் கருணைகரம் பிள்ளையே மிருகக்கூட்டத் தில் சிங்கம்போல் பிரகாசித்தார். அழகாம்பாளுடைய நண் பர்களும், பத்திரிகைகளுக்குச் சமாசாரம் அனுப்புவோரும் மாறிமாறி யவரிடம் நெருங்கிச் சூழ்ந்து கொண்டார்கள். அவர் ஒவ்வொருவரிட மிருந்தும் தப்பியதே அவர் கட்சி யைச் சேர்ந்தவர்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

உபயாம்பாளும் அங்கு வந்திருந்தாள். கிருஷ்ணராவும் ஜெகநாதனும் அவளை யுற்றுநோக்கியபடி யிருந்தார்கள். இச்சமயம் மதுரைநாயகம்பிள்ளை யொழிந்தது நலமென்று அவள் கருதுகிறாளோ வென்று ஜெகநாதன் அவளைநோக்கி னன். இலக்ஷ்மணன் அவளை நெருங்காமலே யிருந்தாலும் இருவரும் ஒருவர்மே லொருவர் கண்வைத்தபடி யிருந் தார்கள்.

அதன் பிறகு பிரசங்கங்கள் நடந்தன. ஆனால் அவை கிருஷ்ணராவ் முதலியவர்களுடைய விவகாரத்தோடு சம்பந் தப்பட்டவையல்ல. அழகாம்பாள் அங்கு நடனத்தைப்பற் றிச் செய்திருந்த நேர்த்தியான ஏற்பாட்டால், அங்குவந் திருந்த எல்லாக் கட்சிக்காரர்களும் விரோதத்தையும், பெரி

யோர் சிறியோர், உயர்ந்த அந்தஸ்து தாழ்ந்த அந்தஸ்து, செல்வவந்தர் ஏழைகள் என்ற ஒரு வித்தியாசத்தையும் கருதாமல் எல்லோரும் ஒன்ருய்க் கைகோத்துக்கொண்டு சந்தோஷமாய்க் கேளிக்கையை யனுபவித்தார்கள்.

கிருஷ்ணராவுக்கும் ஜெகநாதனுக்கும் அக்கேளிக்கையில் நாட்டமில்லை. அவர்கள் அங்கு வந்திருக்கும் ஆட்கள் மேல் கண்ணேக்கம் வைத்திருந்தார்கள். அவர்கள் ஒருபுறமாக உட்கார்ந்து, உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

அச்சமயம் கிருஷ்ணராவின் புத்தியில் ஏதோ யோசனை யுதித்தது. இரண்டொரு நிமிடங்கள் கழித்து அவன் விருந்திற்கு வந்திருக்கிறவர்கள் எல்லாம் உடைகளை வைத்திருக்கும் அறைக்குச் சென்று தான் கொண்டு வந்த சிப்பத்தை யவிழ்த்து அதிலிருந்த ஒரு பெட்டியை யங்கு மறைவான விடத்தில் வைத்துக் கம்பியின் ஒரு முனையை யதில் பிணைத்து விட்டு அக்கம்பியை வெளியிலிருந்த பூஞ்செடிகளின் ஓரமாய்ப் போட்டுக்கொண்டே போய் யாருமில்லாத இன்னெரு அறையின் சாளரத்திற்குள் போட்டு விட்டு ஜெகநாதனேடு மெதுவாய் அந்த அறைக்குள் நுழைந்து கொண்டான்.

அங்குச் சென்றதும், கிருஷ்ணராவ் தன்னிடமிருந்த மற்றெரு பெட்டியை யெடுத்துக் கம்பியின் மற்ற முனையை யதில் பொருத்தி வைத்தான். இப்போது அவர்கள் நடனம் நடக்கும் இடத்தைப் பார்க்கவாவது அங்குள்ளவர்கள் பேசுவதைக் கேட்கவாவது கூடிய தூரத்திலில்லை. ஆயினும் அங்குள்ள பெட்டியின் முன் துவாரத்தில் செவியை வைத்துக் கேட்டபோது நடனம் செய்பவர்களின் காலடிச் சத்தம் முதற்கொண்டு யாவும் நன்ருய் இவர்களுக்குக் கேட்டன.

இதைக்கண்ட ஜெகநாதன் மிக்க வியப்படைந்து கிருஷ்ணராவை நோக்கி "இதென்ன விபரீத அதிசயம்?" என்றான். கிருஷ்ணராவ் அதைப்பற்றி விவரித்துக் கூறினான்.

18—வது அத்தியாயம்.

கிருஷ்ணராவ் அங்குச் செய்து கொண்டு போனது ஒருவிதக் கள்ள டெலிபோன் எனலாம். அதன் மூலமாக இவர்கள் வெளியில் நடக்கும் சம்பாஷணைகளைக் கேட்பதோடு, இவர்கள் அங்கிருந்து பேசினால் மற்றொரு பெட்டியிருக்குமிடத்திலிருந்தே பேசுவதுபோல் கேட்கும். அதற்கென்று அதில் அமைக்கப்பட்டுள்ள மரையைத் திருப்பினால் தான் இவர்கள் பேசுவது மற்றமுனையில் கேட்கும். இன்றேல் கேட்காது.

இவர்கள் நடனத்தின் சந்தடியைக் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். முதல் நடத்தின சங்கீதம் முடிந்தது; இரண்டாவது சங்கீதம் தொடங்கும் சமயம். அப்போது பின் கூறப்பட்ட சம்பாஷணை யிவர்கள் செவியிற்கேட்டது:—

ஹோ! நீ யேன் நடனம் செய்யவில்லை?" என்றான் ஒரு ஆடவன்.

"ஆ! நீயா?" என்றாள் ஒருமாது.

ஆடவன் "ஆம். நான் உன்னிடம் ஒரு வார்த்தை பேசுவதற்காக எதிர் பார்த்துக்கொண் டிருந்தேன்" என்றான்.

கிருஷ்ணராவ் குசு குசுவென்று ஜெகநாதனிடம் "இலக்ஷ்மணசாமியும் உபயாம்பாளும்" என்று கூறினான்.

ஜெகநாதன் "அய்யோ! நாம் பேசுவது கேட்டு விடப் போகிறது" என்றான்.

கிருஷ்ணராவ் "இதோ இந்த மரையைத் திருப்பினு லன்றிக் கேட்காது. அதைப்பற்றி பயமில்லை" என்றான்.

அதற்குள் இலக்ஷ்மணசாமி "நான் உன்னை நீதிச் சபையில் பார்த்தேன். ஆனால் நீ என்னைக் காணவில்லை. கருணகரம் பிள்ளையைப்பற்றி யென்ன நினைக்கிருய்?" என்றான்.

உபயாம்பாள், "நான் கருணகரம் பிள்ளையைக் கவனிக்கச் செல்லவில்லை; அவரைப்பற்றி யெனக்காக வேண்டியது ஒன்றுமேயில்லை. அழகாம்பாளைப் பற்றி என்ன நினைக்கிருய்? நீ அவளைப் பார்ப்பதை நான் கவனிக்கவில்லை யென்று எண்ணிக்கொண்டாய். உன் பார்வை யவள்மே லிருந்து நீங்கவே யில்லையே. நான் நியாயாதிபதி கூறும் தீர்ப்பை எதிர்பார்த்தபடி ஒரு புறம் உட்கார்ந்திருந்தேன்" என்றாள்.

இப்போது இலக்ஷ்மணம் பிள்ளை தான் தப்பித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. அவன் "என் நாட்டம் முழுமையும் அந்தக் கருணகரம் பிள்ளையின்மே லிருந்ததே யன்றி அழகாம்பாளைப்பற்றி யெனக்கு அவசியமேயில்லை" என்றான்.

உபயாம்பாள்:—"அப்படியாயின் ஏழையாகிய என்னை நீ மறந்து விடவில்லை" என்றாள்.

இலக்ஷ்மணசாமிப் பிள்ளை:—"ஓ! உபயாம்பாள். உன்னை மறக்க என்னல் முடியவில்லை. நீயும் மாரப்பனும் ஒன்றுக விருக்கிற வரையில் நான் உன்னை முன்போல் நினைக்கக்கூடவில்லை. அந்தக் கருணகரம் பிள்ளையாலும், அவன் விவகாரங்களாலும், நமக்குள் இத்தகைய பிளப்புண்டாகி விட்டது. ஒரு விஷயத்திற்கு இதனல் நன்மையே யுண்டாகுமென்று நான் கருதுகிறேன்" என்றான்.

உபயாம்பாள்:—"ஆயினும் நீ ஜெயமடையாத விஷயத்தில் இன்னொருவர் ஜெயமடைந்து விட்டது உனக்கு மிக்க மனவெரிச்சலை யுண்டாக்கி விட்டதாகவே தெரிகிறது" என்றாள்.

இலக்ஷ்மணசாமி பேசாமல் தலையசைத்து ஆமென்றான்.

உபயாம்பாள்:—சற்று நேரத்திற்குமுன் நீ என்னை மறந்து விட முயன்றதாகக் கூறினாய்.

இலக்ஷ்மணசாமிப் பிள்ளை:—"ஆம். ஆனால், அது முடியவில்லையே. அதனாலே தான் நீ மதுரைநாயகத்தோடு துர்க்கையன் வைத்த விருந்திற்குச் சென்றதைக் கேட்டதே எனக்கு மிக்க மனவருத்தமுண்டாயிற்று. அது விஷயமாக உன்னை எச்சரிக்கை செய்ய வேண்டுமென்று நான் கருதினேன். மாரப்பன் உன்னை யசட்டையாய் நடத்துகிறான் என்பதை நான் அறிவேன். நீ கருணாகரம் பிள்ளையோடு சில வாரங்களுக்குமுன் நடனம் செய்ததைக் கண்டபோது எனக்கு வெறி பிடித்ததுபோ லாய் விட்டது. பிறகு போகப்போக அவன் அழகாம்பாளை வசப்படுத்திக் கொண்டான் என்றே அறிந்தேன். எந்தப்பக்கம் சென்றாலும் அந்தச் சனியன் எனக்குக் குறுக்கிடுகிறான். ஆ! ஆ! நான் துர்க்கையனைப் போல் நடந்து கொண்டால்......" என்று கூறியதும் அதிகமாய் வெளியிட்டு விட்டோம் என்று கருதியவன்போல் தட்டென்று பேச்சை நிறுத்தி விட்டான்.

இவன்றான் அக்கறுப்புப் புத்தகம் இருக்கிறதென்பதைப்பற்றி உபயாம்பாளிடம் கூறியிருக்க வேண்டுமென்பது ஜெகநாதனுக்கு அச்சமயம் புலப்பட்டது. அதை வெளியிட்டவள் அவளே யென்பதும், கள்ள டெலிபோன் வைத்

துக் கேட்டது தானல்லவென்றும், கருணாகரம்பிள்ளையென்றும் அவள் கருதியிருக்கிறாளென்பதும் இலக்ஷ்மணனுக்குத் தெரியாது.

கடைசியில் இலக்ஷ்மணன் உபயாம்பாளை நோக்கி "நீ மதுரைநாயகத்தோடு துர்க்கையன் நடத்திய விருந்திற்கு ஏன்சென்றாய்?" என்று கேட்டான்.

உபயாம்பாள்:— ஏன் நான் போகக்கூடாது? மாரப்பனைப்பற்றி எனக்கென்ன? என் இஷ்டப்படி நான் ஏன் நடக்கலாகாது? ஆயினும் நீ என்விஷயத்தில் கவனம் வைத்திருக்கிறாய் என்று எனக்குத் தெரிந்திருந்தால்—ஆம், தெரிந்திருந்தால் நான்—அவ்வாறு நடந்துகொண்டிரேன்.

இலக்ஷ்:—"ஆ! நான் உண்மையாகவே உன்னை மறக்கவில்லை. ஆ! நான் உன்னை யிப்போது அறிவதுபோல் நீ மணம் செய்து கொள்ளு முன்பே யறிந்திருந்தால்—ஆகா—எவ்வளவோ நலமாக விருந்திருக்கும்.

உபயாம்மாள்:—என் அத்தவறைத் திருத்த ஒரு மார்க்கமுமில்லையோ? கலியாணம் செய்து கொண்டதாலேயே ஒரு மாது தன் சுகத்தையெல்லாம் இழந்து விடவேண்டுமோ?

இலக்ஷ்மணன் வாயால் ஒரு விடையும் கூறவில்லை. இரண்டொரு விநாடி கழித்து "உபயாம்பாள் இந்த மதுரைநாயகத்தின் விவகாரத்திலிருந்து நான் உன்னைப் பாதுகாக்கிறேன். அப்படி அந்த விஷயம் வெளிவருவதாயின் அது எந்நேரமும் உன் மனதை வாதித்துக் கொண்டேயிருக்கிறதென்று நான் அறிவேன். கருணாகரம் பிள்ளையாவது, மதுரைநாயகமாவது, வேறு யாராவது எங்கேயெதையேனும் வெளியிட்டு விடுகிறார்களோவென்ற பெரும் பீதியே யுன்னை நியாய சபைக்கு அந்த விசாரணை காலத்தில்

வரும்படி கட்டாயப்படுத்தியது. நீ என்னை நம்பு" என்றான்.

உபயாம்பாள்:—"ஓ அப்படியாயின் நாம் நண்பர்களாகவே யிருக்கலாம்" என்றாள்.

இலக்ஷ்:—"ஏன்? காதலர்களாகவே இருக்கலாம்" என்றான்.

பிறகு அவள் குசுகுசுவென்று என்னமோ கூறினாள். அவன் "என்ன உபயாம்பாள்?" என்றான். அவள் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். கருணாகரம் பிள்ளையைத் தோற்கடிக்கவேண்டும். அவன்...அவன்...அதை உபயோகப் படுத்தும் சக்தி அவனிடம் இருக்கலாகாது." என்றாள்.

இலக்ஷ்மணசாமி கடுகடுப்போடு "இல்லை, சற்று பொறு. ஒரு காலும் அவனிடம் அந்த வல்லமையிருக்கலாகாது" என்றான்.

அதன்பின் இரண்டு சதியாலோசனைக்காரரும் ஒருவருக்கும் ஐயமுண்டாகாத விதமாய்ப் பிரிந்து சென்றார்கள். கிருஷ்ணாராவும் ஜெகநாதனும் பின்னும் சற்றுநேரம் தங்கள் செவிகளில் விழும் சமாசாரங்களை யெல்லாம் கேட்டார்கள். அவர்களுக்குண்டான வியப்பிற்கோர் அளவில்லை. ஏனெனில் அந்த விடத்தில் வெளிக்குப் பார்த்தால் மிக்க யோக்கியமாகவும் நாணயமாகவுமே விஷயங்கள் புலப்பட்டன. ஆனால் உள்ளே நடக்கும் அயோக்கிய நடக்கைகள், சதியாலோசனை, கணவன் துரோகம், மனைவித்துரோகம் முதலிய அக்கிரமங்களுக்கு அளவேயில்லை. அதனாற்றான் கிருஷ்ணாராவும் ஜெகநாதனும் அத்தகைய வியப்படைந்தார்கள்.

நேயர்களே! இங்குச்சற்று நம் கதையை நிறுத்தி ஒரு விஷயம் உங்களுக்குக்கூற விரும்புகிறோம். உபயாம்பாளுக்கு மாரப்பன் கணவன் என்பது நீங்கள் அறிந்த விஷயமே. மேல்கூறிய விஷயங்களால் அவள் இலக்ஷமணப்பிள்ளையின் மேல் காதல்கொண் டிருக்கிறாளென்றும், அவனும் அவள்

இன்னொருவன் மனைவியென்று தெரிந்தும் அவள்மேல் காதல்கொண் டிருப்பதாய் அவளிடமே கூறினனென்றும் அறிந்தீர்கள். மேலும் அவள் "எனக்குக் கலியாணம் ஆன தாலேயே என் சுகத்தையெல்லாம் இழந்து விடுவதா" என்று கூறியிருக்கிறாள்.

சகோதர சகோதரிகளே! அதன் அர்த்தமென்ன? "நாம் இருவரும் பரஸ்பரம் காதல்கொண் டிருக்கிறோம். என் கலியாணத்தால் அது தடைப்படலாகாது. என் கண வனை யெந்தவழியாலேனும் ஒழித்து விடலாம்" என்பதே. கண்தெரியாத காதல்பேயின் வயப்பட்டோர் எதையும் செய்ய அஞ்சமாட்டார்கள். இந்தத் துணிகரம் எதனாலுண் டாகிறது எனில் நாம் கணவனிருக்கும்போதே வேண்டுமா யின் வேறு கணவனை மணம்புரியலாம் என்ற நம்பகத்தால். அதாவது அவர்கள் தேசாசாரம் அவ்வாறிருக்கிறது.

இயற்கையில் மனத்தூய்மையுடைய மனிதர் மிகத்துர் லபமே. பெரும்பாலோர் வெளி நிற்பந்தத்தாலேயே அயோக் கிய நடக்கையில் பிரவேசிக்காமலும் துஷ்டகாரியங்களைச் செய்யாமலு மிருக்கிறார்கள். நமது நாட்டில் அத்தகைய கட்டளைகளும் கண்டிப்பான ஆசாரங்களும் இருக்கின்றன. ஒரு ஸ்திரீ தன் கணவன் வராம லிருக்கும்போதே தன் நண் பனாகிய ஒருவனோடு கூடிக்கொண்டு மூன்றாவது மனிதன் வீட்டில் நடக்கும் விருந்து நடனம் முதலிய கேளிக்கை களுக்குச் செல்கிறபோது அவளிடம் கற்பு எவ்விதமாக விருக்கலாகும்? அவள், அன்னிய வாலிப புருடனோடு சேர்ந்து, அதிலும் இருவரும் ஒருவருக் கொருவர் பிரியப் பட்டு ஜதைகூடிக்கொண்டு கைகோத்து நடனம் புரிவது எத்தகைய மானக்கேடான விஷயம்?

இத்தகைய நடக்கைகளால் அவள் மனம் மிகச் சுலப மாய் அன்னியன்மேல் காதல்கொள்கிறது. இது இயற்

கையே. ஒரு விருந்தில் அவ்வாறு நடந்தால் பிறகு மறுபடி இருவரும் ஏகாந்தமாய்ச் சந்திக்க வழி யேற்படுத்திக்கொள் கிறார்கள். இப்போது இவர்கள் காதலுக்கு இடையூறாக விருப்பவன் அப்பெண்ணின் கணவன். கள்ளக்காதல ரிரு வரும் சேர்ந்து அவனை யொழிக்க வழிதேடவேண்டியது அவசியமாகிறது. அவனை யொழிக்க இரண்டேவழிகளுள. ஒன்று, மனைவி; அவன் என் சிநேகிதரோடு பேசவேண் டாம், நடமாடவேண்டாம் என்று என் சுயாதீனத்தைக் குறைத்து என்னை யவமரியாதையாய் நடத்துகிறானதலால் எங்கள் கலியாண ஒப்பந்தத்தை இரத்து செய்துவிட வேண் டும் என்று நீதிச்சபையில் வழக்காடிக் கலியாணத்தை யிரத்துசெய்துவிட்டுத் தன் கள்ளமாப்பிள்ளையை மணம் புரியவேண்டும். கணவன் அவ்வளவு பொய்ச்சாக்கிற்குக் கூட இடங்கொடுக்காது மிக்க நேர்மையாய் நடந்துகொள் கிறவனாயின் என்னசெய்வது? எந்தவழியாகவோ, பாஷா ணமோ எதுவோ, ஒருவழியில் அவனை யொழிக்க வேண் டியதே.

இப்போது நமது உபயாம்பாள் தன் கணவன் இருக் கையில் இலக்ஷ்மணசாமிப்பிள்ளையாகிய கள்ளக்காதலனி டம் பேசியமாதிரியைக் கவனியுங்கள். இவ்வளவு அக்கிரம மான விபரீதச் செய்கைகளுக்கும் வழிகொடுத்தது அவர் கள் ஆசாரமே. அதாவது "நாங்கள் மாதர்களைக் கௌர வத்தோடு நடத்துகிறோம். எங்களைப்போல் மாதர்க்குப் பூரண சுயாதீனம் அளிப்பதுதான் மிக்க உயர்வான நாக ரீகம் என்று கருதி மாதர் தம்பிரியப்படி அன்னிய ஆடவ ரோடு உலவச்செல்லவும், விருந்துமுதலிய விடங்கட்குத் தனியாகவோ தம் நண்பர்களாகிய புருடர்கள் கூடவோ செல்லவும், எவ்வளவு காலமாயினும் பகல் இரவென்றின்றி வெளியில்போய்க் காலத்தைப் போக்கிவிட்டுவரவும் விட்டு

விடுவதுமே இத்தகைய தீங்குகளுக்கெல்லாம் காரணம். நாளாவட்டத்தில் அத்தகைய காரியங்கள் அவர்களுக்குச் சகஜமாய்ப் போய்விட்டதால் அதில் மானவமானம் தெரிய வில்லை. மேலும் பெண்ணே யிரண்டாவது தெய்வம். ஆட வர்க்கு முந்தி யவர்களுக்கே மரியாதை செய்யவேண்டும். அவர்கள் சுகத்திற்குமிஞ்சிய போகம் உலகில் வேறில்லை" என்பது அவர்கள் கொள்கை. அதாவது உலகாயத மதத் தின் கொள்கை. அது அவர்களுக்கு இயற்கைக்கு இரண் டாவதாய் விட்டது.

இப்போது நாம் அவர்கள்மேல் குறைகூறவல்ல அதைப் பற்றி யிவ்வளவு கூறியது. இப்போது நமது நாட்டில் நம் மாதர்களுக்கும் அவ்வாறே திரிய அனுமதியளித்துவிட வேண்டு மென்றும், அப்போதுதான் நாம் நாகரீகத்தில் சீர்திருத்த மடைந்தவர்களாகக் கருதப்படுவோ மென்றும், நாம் செல்கிற இடங்களுக்கெல்லாம் அவர்களையும் அழைத் துச் செல்லவேண்டும் என்றும், அவர்களை யுதவியின்றித் தனியே வெளியில் செல்லலாகாதென்று கூறுவது அவர்க ளது கௌரவத்தை நாமே குறைப்பதாகு மென்றும், அவர் கள் சாதாரணமாக யார்கூட வேண்டுமாயினும் புழங்கும் படி விட்டுவிடுவதுதான் கௌரவமான நாகரீகமென்றும் கருதும் மந்தமதியினர், மேல்நாட்டு நாகரீக மயக்கம் மண் டைக் கேறப்பெற்றோர் பலர் இருக்கிறார்க ளாதலால் அத்த கையோர் இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டு மென்பதற்கே இதை விவரித்துக்கூற நேர்ந்தது. இத்தகையோர் தாம் கெட்டதன்றித் தம் மக்களையும் அந்த மேல்நாட்டு நாகரீகத் துறையில் பழக்குகிறார்கள். அந்தோ! இவர்கள் மேல் நாட்டாரிடமுள்ள குணங்கள் ஆசார ஒழுக்கங்கள் இவற்றில் நமக்கு நன்மை பயக்கத் தக்கவற்றை யெள்ளளவும் பின் பற்றுவதேயில்லை. புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக்

கொள்ளும் மாதிரியே நடக்கிறார்கள். கடவுளே இவர்கள் புத்தியைத் திருத்தவேண்டும். இனி நமது கதையைத் தொடங்குவோம்.

கிருஷ்ணாராவும் ஜெகநாதனும் மிக்க வியப்போடு சிந்தித்துக்கொண்டே யிருக்கையில் இன்னும் இருவர்பேசும் சத்தம் கேட்டது. இச்சமயம் இருவரும் ஆடவரே. ஒருவன் "ஆ! நீயா? நீ யேன் இங்கு வந்தாய்?" என்றான். அக்குரல் இலக்ஷ்மணசாமியின் குரலென்று நன்றாகத் தெரிந்தது.

மற்றவன் தன்மை வாலிபன்போல் குரலால் தெரிந்தது. அவன் "ஆம். நான் காரியமாகவே வந்தேன். நான் இங்கு என்ன நடக்கிறதென்பதைப்பற்றிக் கவனிக்க என் கூட்டாளிகளோடு கூட வந்தேன்" என்றான்.

அக்குரல் யாருடைய குரலென்று தெரியவில்லை. ஆனால் அது, கள்ளக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவன் குரலாகவே யிருக்கவேண்டுமென்பதுமட்டும் நன்கு விளங்கியது.

இலக்ஷ்மணசாமி "ஈட்டி! என்ன சங்கதி முளைத்திருக்கிறது?" என்று ஐயத்தோடு கேட்டான்.

கிருஷ்ணாராவ் ஜெகநாதனைக் குறிப்பாய் நோக்கி "ஈட்டித்தானன். உண்மை தெரிகிறதா?" என்றான்.

ஈட்டித்தானன் இலக்ஷ்மணசாமியை நோக்கி "உங்களிடம் எதையும்கூற எனக்குத் தடுமாற்றமில்லை. நீர் நமது கட்சியில்சேர்ந்தவர். உம்மேல் எங்களுக்கு வஞ்சகமில்லை. அந்தக் கருணாகரம்பிள்ளை யிருக்கிறானே யவன்றான்" என்று தாழ்ந்த குரலாகக் கூறினான்.

இலக்ஷ்மணசாமி "என்ன கருணாகரனா? ஓகோ! அப்படியாயின் அவனை வழிக்குக் கொண்டுவந்து விட நீங்கள் முயற்சி செய்கிறீர்களோ?" என்று துரிதமாகக் கேட்டான்.

ஈட்டித்தானன் தன் பேச்சு யாருக்கும் கேட்காது என்ற நம்பகத்தால் "சந்தேகமென்ன? என் உயிருக்கும் உங்கள் உயிருக்கே வேண்டுமாயின் பந்தையம் வைப்போம்" என்றான்.

இலக்ஷ்:—"அதெப்படி?" என்றான்.

ஈட்டித்தானன் முதலில் தடுமாற்றமடைந்து கூற மயங்கினன். பிறகு இலக்ஷ்மணசாமியின் பார்வையால் தைரியமடைந்தவனாகி, "கருணாகரம் பிள்ளை யிங்கிருந்து செல்ல ஒரு வண்டி கொண்டு வரும்படி இங்குள்ள வேலைக்காரரிடம் கட்டளை யிட்டிருக்கிறான். அந்த வண்டியை நாங்கள் அமர்த்தி வைத்திருக்கிறோம். வண்டிக்காரன் நமது கையில் வேலை செய்பவன். அவன் நமது பொறுக்கான ஆசாமிகள் இதற்கென்று காத்துக்கொண் டிருக்கும் இடத்திற்கு வண்டியைக் கொண்டுபோய் விட்டு விடுவான். நமது ஆட்கள் அளவு மீறி விபரீதம் ஒன்றும் செய்யமாட்டார்கள். கருணாகரம்பிள்ளை சில வாரங்கள் வைத்தியசாலையில் ஒரு மஞ்சத்தில் படுத்துக்கொண்டு சிகிச்சையிலிருந்தால் அவன் என்ன செய்யக் கூடும் பார்ப்போம். அவ்வளவே சகங்தி. உங்களிடத்திலானதால் இதைக்கூறினேன். வேறு யாராக விருப்பினும் கூறியிருக்கமாட்டேன். ஆ இதோ அவன் அப் பெண்ணோடு வருகிறான். நான் போய் விடுகிறேன்" என்று கூறிவிட்டு நழுவி விட்டான்.

இலக்ஷ்மணனும் உடனே நழுவி விட்டான். அதனால் கருணாகரம் பிள்ளையும் அழகாம்பாளும் அவனைச் சந்தித்துப் பேசவில்லை.

இரண்டொரு விநாடிகள் கழித்துக் கருணாகரம் பிள்ளையும் அழகாம்பாளும் பேசுவது இவர்களுக்குக் கேட்டது. அழகாம்பாள் "தாங்கள் செல்லவேண்டுமோ?" என்று கேட்டாள்.

கருணாகரம்பிள்ளை:—"நான் அப்படித்தான் அஞ்சுகிறேன். நான் நாளைக்கு ஓரிடத்தில் பிரசங்கம் செய்ய ஒப்புக் கொண்டிருக்கிறேன். அதற்கு ஆயத்தம்செய்யவேண் டும். இன்று இங்கு எல்லாம் மிக்க நேர்த்தியாகவும் திருப்தியாகவுமே நடந்தன. இன்று இங்கு நடந்தவிஷ யங்களால் நமது கட்சிக்கு மிக்க அனுகூலம் என்பதிற் சந்தேகமேயில்லை. நாளைக்கு என் காரியாலயத்தில் உன்னை நான் காணக்கூடுமா?" என்றார்.

அழகாம்பாள்: — "கட்டாயம் நான் அங்கு வருகிறேன்" என்றாள்.

அச்சமயம் ஒரு வேலைக்காரன் கருணாகரம்பிள்ளை யருகில் வந்து, "ஐயா! தாங்கள் ஏற்பாடு செய்யச்சொன்ன வண்டி வந்திருக்கிறது. தாங்கள் சீக்கிரம் செல்வதற்காக அந்த வண்டியை வலது பக்க வாயிற்படி யருகில் நிற்கவைத் திருக்கிறேன்" என்று மிக்க அக்கரையோடு கூறினான்.

அதைக்கேட்டதே ஜெகநாதன் மிக்க கலக்கத்தோடு கிருஷ்ணராவை நோக்கினான். கருணாகரம்பிள்ளை எச்சரிக்கை யடையுமுன் போய்விட்டால் என்னமோசம் நேரிடுமோ வென்றஞ்சினான். அவர்கள் அந்த அறையைவிட்டுப் புறப் பட்டு நடனம் செய்யுமிடத்திலிருந்த ஜனங்களில் நுழைந்து கருணாகரம்பிள்ளை யிருக்குமிடத்திற்குச் செல்வதாயின் மிக்க கஷ்டம். அவர்கள் சிந்திப்பதற்குள் கருணாகரம் பிள்ளை மறு படி பேசும் சத்தம் கேட்டது. அவர் "அழகாம்பாள்! வேறு யாரேனும் எனக்குப்பதிலாகப் பிரசங்கம் செய்யச்செல்வதா யின் எனக்குப் போகவென்னமோ விருப்பமில்லை. ஆனால், உன்னோடு நான் தனியே பேசச் சந்தர்ப்பம் வாய்த்தது இதுதான் முதல் தடவை..." என்றதே கிருஷ்ணராவுக்கு அதற்குமேல் அவர்கள் சம்பாஷணையை உற்று கேட்பது தகுதியாய்ப் புலப்படவில்லை. மேலும் ஆலசியம் செய்ய

அது சமயமுமல்ல. ஆகையால் அவன் உடனே தன் கருவியிலுள்ள மரையைத் திருப்பி விட்டு "கருணாகரம் பிள்ளை! அழகாம்பாள்! நீங்கள் இருக்குமிடத்திற்கருகில் பின் பக்கமுள்ள மரத்தடியில் பேசும் கருவியிருக்கிறது. மிரளவேண்டாம். நான்றான் கிருஷ்ணராவ். நான் இதோ வருகிறேன். அதற்குள் நீங்கள் சென்றால் ஆபத்து" என்று கூறினன்.

கிருஷ்ணராவ் அவ்வாறு எச்சரிக்கை செய்தபோதிலும் முதலில் அருகில் தங்களைப் பெயரிட்டு யாரோ கூப்பிடு வதைக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். மனிதர் ஒருவருமில்லை. உடனே அவர்களுக்கு மிக்க கலக்கமுண்டாயிற்று. பிறகு நான்றான் கிருஷ்ணராவ் என்ற வரையில் கேட்ட பின்பே சற்று நிம்மதி யேற்பட்டது. ஆயினும் கிருஷ்ணராவும் ஜெகநாதனும் அவர்களருகில் சென்றபோது அவர்கள் முகங்களிலிருந்த கலக்கம் பூரண மாய் நீங்கவில்லை.

கருணாகரம்பிள்ளை அவர்களைக் கண்டதும் ஆவலோடு "என்ன? என்ன சங்கதி?" என்றார். கிருஷ்ணராவ் உடனே தான் இலக்ஷ்மணசாமியும் ஈட்டித்தானனும் பேசிக்கொண் டிருந்தபோது கேட்ட சதியாலோசனையைக் கூறினன். அதைக் கேட்ட கருணாகரம்பிள்ளை வெகுவாய்ப் புகழ்ந்து "நான் என் நன்றியறிதலை யெவ்வாறுதான் உனக்குக் காட்டு வேன்? கடவுளே யுன்னை யென்னிடமனுப்பினர்" என்றார். அழகாம்பாள் இன்னும் அதிகமாகத் தன் நன்றியறிதலை வெளியிட்டாள்.

19—வது அத்தியாயம்

கிருஷ்ணாராவ் நடந்து கொண்ட மாதிரியால் கருணாகரம் பிள்ளை புறப்படுவது ஆலசியப்பட்டது. இதனால் ஈட்டித்தானனும் அவன் ஆட்களும் ஐயமுற்றார்கள். ஆகையால் கிருஷ்ணாராவ் வெளியிற் சென்று பார்க்கும் போது சுப்பனாவது அவன் அமர்த்திய வண்டியாவது ஒன்றுமேயில்லை. யாவரும் மாயமாய் மறைந்து விட்டார்கள். இதனால் கிருஷ்ணாராவ் முதலியவர்கள் அழகாம்பாளைக் கடைசிவரையில் தனியாய் விட்டுப் பிரியக் கூடவில்லை.

இலக்ஷ்மணசாமிப் பிள்ளை ஈட்டித்தானனிடம் பேசியதும் போய் விட்டான். உபயாம்பாள் அவன் செல்லு முன்பே சென்றாள். கடைசியில் இனி ஒரு பயமுமில்லை, கருணாகரம் பிள்ளை செல்லலாம் என்று கிருஷ்ணாராவ் கூறிய போது, அவர் கிருஷ்ணாராவும், ஜெகநாதனும் தம் கூடக் காவலாக வந்தாலொழியத் தாம் செல்ல முடியாதென்றார். ஆகையால் அவர்களிருவரும் அவரை யழைத்துப் போய் வீட்டில் விட்டார்கள்.

கருணாகரம்பிள்ளை கிருஷ்ணாராவையும் ஜெகநாதனையும் நோக்கி "நான் உங்களுக்கு எவ்வளவு வந்தனமளித்தாலும் போதாது. நான் எங்கும் உங்களைத் தேடிப் பார்த்தேன். இங்கு பேச ஆரம்பிக்க நெடுநேரமாகுமென்று கருதி வீட்டிற்குப் போய்விட்டீர்களாக்கும் என்று எண்ணினேன்" என்றார்.

கிருஷ்ணாராவ் "அதற்குமாறாக மிக்க சுறு சுறுப்பாய் விவகாரம் நடப்பதாகவே கருதினோம்" என்றான். கருணாகரம் பிள்ளைக்கு அந்த விடை திருப்திப்படவில்லை. ஆயினும் கிருஷ்ணாராவுக்கு அச்சமயம் விவரம் ஒன்றும் கூற விருப்பமில்லை. கிருஷணாராவும் ஜெகநாதனும் வீடுபோய்ச் சேர்ந்த

போது கிருஷ்ணுராவ் "உபயாம்பாள் கருணுகரம் பிள்ளையைப்பற்றிப் பேசியதை நீ என்னென்று கருதுகிருய்?" என்று ஜெகநாதனைக் கேட்டான்.

ஜெகநாதன் "அவ்வளவாய்க்கூற முடியாது. ஆயினும் அவர் அழகாம்பாளைக் காணுமுன் உபயாம்பாளிடம் மிக்க நட்புக்கொண் டிருந்திருப்பார் என்று கருதுகிறேன்" என்ருன்.

கிருஷ்ணுராவ் தலையை யசைத்து, "துரைத்தன விஷயங்களிலும் பொதுநல விவகாரங்களிலும் தலையிட்டுக் கொண்டிருப்பவர் அத்தகைய மாதிடம் ஏன் நட்புக் கொள்வார்? நான் கூறுவதை மனதில் வைத்துக்கொள்; அவளாவது அவளைச் சேர்ந்த யாராவது இந்த விவகாரம் முடிவதற்குள் அவருக்கு ஏதேனும் தொந்தரை யுண்டாக்கப்போகிருர்கள்" என்ருன்.

கிருஷ்ணுராவ் அதற்குமேல் ஒன்றும் கூறவில்லை. ஆனல் ஜெகநாதன் அதைப்பற்றிச் சிந்திக்கலாஞன். கருணுகரம் பிள்ளையைப் போன்றவர் உபயாம்பாள் மேல் விருப்பம் கொள்வார் என்று அவன் கருதவில்லை. ஆயினும் அவளும் இலக்ஷ்மணசாமிப் பிள்ளையும் இவரைத் தோற்கடிக்கவேண்டுமென்று பேசியது அவன் நினைவிற்கு வந்தது. இப்போரில் அடுத்தபடியாக என்ன நடக்குமென்று அவனுக்குப் புலப்படவில்லை. ஆயினும் சிக்கிரத்திலேயே அது புலப்பட்டு விட்டது.

மறுநாள் காலை கிருஷ்ணுராவ் தமது காரியாலயத்திற்கு வரும்படி உடனே கருணுகரம் பிள்ளையிடமிருந்து மிக்க அவசரமான சமாசாரம் அவனுக்கு வந்தது. கிருஷ்ணுராவ் உடனே சென்ருன். கருணுகரம் பிள்ளை அவனைக் கண்டதும், "கிருஷ்ணுராவ்! நீ பன்முறை யெனக்குச் செய்த உபகாரத்திற்காக, என்னைக் கஷ்டங்களினின்றும் காப்பாற்

றியதற்காக உனக்கு எவ்வாறு வந்தன மளிப்பதென்று எனக்குப் புலப்படவில்லை. உன்னை யடிக்கடி கூப்பிட்டுக் கொண்டே யிருப்பது எனக்கே வெட்கமாகவிருக்கிறது'' என்றார்.

கிருஷ்ணராவ் "இது ஒரு பெரும்போர். உமது விரோதிகளுக்கு இதன் மூலே முடக்கு யாவும் நன்றாகத் தெரியும். அவர்களை நசுக்குவதில் நான் தங்களுக்கு எள்ளளவு உதவி செய்யச் சந்தர்ப்பம் வாய்ந்தாலும் நான் மிக்க சந்தோஷமடைவேன். தற்சமயம் அதிருப்தியான சம்பவம் ஏதோ நடந்திருப்பதாகத் தங்கள் முகத்தாலறிகிறேன்'' என்றான்.

கருணகரம் பிள்ளை "ஆம் அவ்வாறு நேர்ந்தது உண்மையே'' என்றார். அதன் பிறகு அது இன்னதென்று தமக்குத் தெரியாது விழிப்பவர்போல் சற்றுநேரம் பேசாமலிருந்தார். பிறகு கிருஷ்ணராவை நோக்கி "யாரோ என்னைப்போல் டெலிபோனில் பேசி மிக்கக் குழப்பத்தையுண்டாக்கி விட்டிருக்கிறார்கள். காலை முதல் நாலாபக்கங்களிலுமிருந்து பலர் 'தாங்கள் துர்க்கையனும் மதுரை நாயகம் பிள்ளையும் கூறும் ஏற்பாட்டிற்கு ஒத்துக்கொண்டீர்களா?' என்று கேட்கிறார்கள்'' என்றார்.

கிருஷ்ணராவ் "சரிதான். தங்களைப்போல் யாரோ பேசுகிறார்கள் என்பதன் அர்த்தமென்ன?'' என்றான்.

கருணகரம் பிள்ளை:—"என்? இன்று அதிகாலையில் ஒருவன் என்னை டெலிபோனில் கூப்பிட்டான். தான் துர்க்கையன் என்று கூறி என்னைச் சந்திப்பதில் தங்களுக்கு ஏதேனும் ஆக்ஷேபனையுண்டோ என்று கேட்டான். நான் அப்படியே சந்திப்பதாகவும் ஆனால் அதில் ஒன்றும் பயனில்லையென்றும் கூறினேன். பிறகு அதே ஆள் நான் கூப்பிடுவதுபோல் துர்க்கையனைக் கூப்பிட்டு என்னைச் சந்திக்க ஏதேனும் ஆக்ஷே

பனையுண்டாவென்ருன். துர்க்கையன் நானே கேட்ப தாகவெண்ணி அப்படியே சந்திக்கிறேன் என்ருன். அவன் எவனே, அவன் செய்த முட்டாள் தன மான விவகாரம் விபரீதமாகவே முடிந்திருக்கும். ஆயி னும் எனக்கென்னமோ இதில் ஒருவித சந்தேகமுண் டானதால் நான் துர்க்கையனை டெலிபோனில் கூப்பிட் டேன். அவன் 'தாங்கள் முதலில் என்னைக் கூப்பிட்ட வரையில் அவ்வாறே சந்திக்க எனக்கு ஆக்ஷேபனை யில்லை' யென்ருன். அதன்மேல் நான், நான் கூப்பிட வில்லையென்றும் யாரோ இப்படிக் கலகம் செய்கிருர்க ளென்றும் கூறினேன். அதன்மேல் அச்சந்திப்பு இரத்து செய்யப்பட்டது. ஆயினும் அச்சங்கதிகள் பத் திரிகைகளில் வெளியாகி விட்டன. இதனுல் ஒரு கெடுதியுமில்லையென்று கருதுவாய். ஆனல் உண்மை யப்படியல்ல. யாவரும் நான் இலஞ்சம் பெற்று எதிர்க் கட்சிக்கு விவகாரத்தை விட்டுக் கொடுத்து விட்ட தாய்க் கருதுவார்கள்" என்ருர்.

கிருஷ்ணராவ்:—"ஆ! இது பழைய கதையே. வடக்கு வீதி ஒனுய் என்று ஒருவன் இருக்கிருன். அவன்ருன் இம்மாதிரி தந்திரமான வேலைகளைச் செய்வதில் பிர சித்திபெற்றவன். இன்னெருவரைப்போல் பேசுவதில் அவன் மிக்க கைதேர்ந்தவன். அவன் இரண்டு விரோ திகளைப்போல் பேசி இருவரை யேமாற்றி வம்பு விளைத்து விடுவான்" என்ருன்.

கருணுகரம் பிள்ளை:—"ஆ! வடக்கு வீதியா? இது முன் னமே வெளிவந்த இரண்டு வதந்திகளைப்பற்றி எனக்கு நினைப்பூட்டுகிறது. அதாவது இலக்ஷ்மணசாமி நகரச் சீர்திருத்த அமைப்பைப்பற்றிய வேலையைக் குத்தகை யெடுப்பதற்கு நான் உதவி செய்ய ஒப்புக்கொண்ட

தாகவும், அதற்குப் பதில் நான் என் கட்சி விவகாரத்தை விட்டுக் கொடுப்பதாய் ஒப்புக் கொண்டதாகவும் வதந்தி யுண்டாக்கி விட்டார்கள்—இது ஒரு பெரும் பொய்" என்றார்.

ஜேகநாதன்;—"அந்த வடக்கு வீதி ஒனுய் என்பது இலக்ஷ்மணசாமியாகவே யிருக்குமென்று நான் கருதுகிறேன்" என்றான்.

கிருஷ்ணராவ் டெலிபோன் புத்தகத்தை யெடுத்துக் கொண்டே "அது வக்கீல் கனகசபைப் பிள்ளையாகவும் இருக்கலாகும். அவன் வடக்கு வீதியில் ஒரு காரியாலயம் வைத்துக்கொண் டிருக்கிறான்" என்றான்.

கருணாகரம் பிள்ளை:—"அவன், அவர்களில் யாராகவேனு மிருக்கலாம். துர்க்கையன் முதல் அவர்களனைவரும் எதையும் செய்யத் தக்கவர்களே. மதுரை நாயகம் மட்டும் வெளியிலிருந்தால் நான் அவன் மேலேயே சந்தேகங் கொள்வேன்" என்று கூறிவிட்டு, ஒரு கையச்சில் அடித்த கடிதத்தைக் கிருஷ்ணராவ் முன் வைத்து "இது நான் பத்திரிகைக்கு அனுப்பிய சமாசாரத்தின் நகல்" என்றார். அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:—

"பத்திரிகைகளில் என்னைப்பற்றி வெளியான சங்கதிகளைப் பார்த்தேன். யாரோ துஷ்டர்கள் டெலிபோனில் நான் பேசுவதாகப் பேசி மிக்க இழிவான சூது மார்க்கமாய் ஜனங்களுக்கு என்மே லிருக்கும் நம்பிக்கையைக் குறைக்கப் பார்க்கிறார்கள். இத்தகைய படுமோசச் செயலை யான் இதுகாறுங் கண்டதேயில்லை. யாரேனும் அத்தகைய ஆசாமியை அல்லது ஆசாமிகளை யறிந்து எனக்குத் தெரிவித்தால் நான் அவர்களுக்குத் தகுதியான பரிசளிப்பேன். ஏனெனில் இது பெரிய குற்றமான செய்கை. அத்தகைய

ஆசாமிகளைப் பிடித்துத் தண்டனை யடையச் செய்ய வேண்டும்''

கிருஷ்ணராவ் இதை வாசித்துப் பார்த்தபின், "இது ஒரு பயனையும் உண்டாக்காதென்றே நான் நினைக்கிறேன். ஏனெனில் இத்தகைய காரியத்தைச் செய்வது யாருக்கும் எளிது. ஒருவர் ஒரு பத்திரிகைக் காரியாலயத்திற்குச் சென்று பணத்தைக் கொடுத்து இதைப் பிரசுரம் செய்யுங்கள் என்றால் அவர்கள் பிரசுரித்து விடுகிறார்கள். பிறகு யார் என்று கண்டு பிடிப்பது ஆகாத காரியம்'' என்றான்.

ஜெகநாதன், "ஆயினும் அதைக் கண்டு பிடிக்க ஏதேனும் ஒரு வழியிருக்குமென்றே நான் நினைக்கிறேன்'' என்றான். ஆனால் அது என்ன வழி யென்பது அவனுக்கே தெரியாது.

கிருஷ்ணராவ், "என்ன வழி?'' யென்றான். ஜெகநாதன், "நான் கூறுவதாவது இதைச் செய்வது துர்க்கையனா அல்லது கனகசபையா அல்லது இவர்களின் ஆட்களில் யாராவதாவென்று கண்டு பிடிக்க உனக்கு ஏதேனும் ஒரு வழி புலப்படும் என்பதே'' என்றான்.

கிருஷ்ணராவ் சற்றுநேரம் சிந்தித்தான். கடைசியில் "ஆம், ஒருவழி யிருக்கிறது. நீங்கள் இங்கேயே யிருங்கள். நான் என் இரசாயன சாலைக்குச் சென்று துரிதமாக வந்து விடுகிறேன். இதற்கிடையில் யார் டெலிபோனில் கூப்பிட்டாலும் 'அவர் இங்கில்லை. சற்று நேரங் கழித்துப் பேசுங்கள்' என்று கூறி விடுங்கள்'' என்றான்.

கருணாகரம் பிள்ளையின் காரியாலயத்தில் எவ்வளவு நெருக்கமான வேலையிருக்கும் சமயத்திலும் வெளியிலிருந்து சமாசாரம் வந்து கொண்டே யிருப்பது வழக்கம். டெலிபோனில் அடிக்கடி சமாசாரம் வந்து கொண்டே யிருந்தது. கருணாகரம் பிள்ளை, "ஜெகநாதம்! எல்லாவற்றையும் நீயே

வாங்கிப்பார். உனக்கு அவசியமானதென்று தோன்று கிறதைப் பற்றி மட்டும் என்னிடம் கூறு. மற்றவற்றிற்கெல்லாம் நான் இங்கில்லையென்று கூறிவிடு'' என்றார்.

அடிக்கடி யாராரோ கூப்பிட்டுக்கொண்டே யிருந்தார்கள். ஒரு சமயம் அழகாம்பாளிடமிருந்தும் ஏதோ சங்கதி வந்தது. கருணாகரம் பிள்ளை யதை மிக்க அக்கறையாய்க் கவனித்தார். கடைசியாகப் பேசும் குழலை ஜெகநாதன் கீழே வைத்ததும் யாரோ கூப்பிட்டார்கள். ஜெகநாதன் வெறுப்போடு மறுபடி குழலை யெடுத்துச் செவியில் வைத்தான். "நான் 'வடக்கு வீதி வதந்தி' என்ற பத்திரிகையின் ஆசிரியன். நீர் கருணாகரம் பிள்ளையென்று நம்புகிறேன். இலட்சுமணசாமிப் பிள்ளையும் அவனுடைய பாங்கும் திவாலெடுத்து விட்ட சங்கதி தங்களுக்குத் தெரியுமா? இங்கு வீதிகளில் பல கதைகள் வழங்குகின்றன'' என்று சங்கதி வந்தது.

ஜெகநாதன், "சற்று பொறும். கருணாகரம் பிள்ளை யிங்கில்லை. ஆயினும் இது அவருடைய காரியாலயந்தான். அவர் இன்னும் அரைமணி நேரத்தில் வருவார். அதன் பிறகு கூப்பிடுங்கள்'' என்றான்.

ஜெகநாதன் பிறகு அச்சங்கதியைக் கருணாகரம் பிள்ளையிடம் கூறியபோது, அவர் மனக்கலக்கமடைந்து "இப்போது ஒவ்வொருவரும் கீழிறங்குவதாகத் தெரிகிறது'' என்றார்.

ஜெகநாதன்:—"ஏன், இது அடியோடு ஏமாற்றுதலாக இருக்கலாகும்'' என்றான்.

கருணாகரம் பிள்ளைஅப்படியே யிருக்கலாமென்று தலையசைத்து "கிருஷ்ணாராவ் இல்லாவிட்டால் நமக்குத் தக்க உதவியில்லையென்று நாம் இருவரும் உணர்கிறோமல்ல

வா? அவன் இல்லாதபோது நாம் செய்யும் உத்தேசங் களைப்பற்றி நமக்குப் பூரண சந்தேகமே" என்றார்.

இவர்கள் இவ்வாறு எதை யெப்படிக் கருதுவதென்று துணிவாய்த் தீர்மானிக்க முடியாமல் குழப்பமான சந்தேகத் மனதோடு இருக்கும்போது கிருஷ்ணராவ் அங்குச் சென் றான். அச்சமயம் அவன் வந்தது, பாலைவனத்தில் நீரின் றிக் கஷ்டப் படுகிறவர்களுக்கு நல்ல நீரூற்று அகப்பட்டது போலிருந்தது.

கிருஷ்ணராவ் அவர்களை விட்டு விட்டுச் சென்றபின் மிகத் துரிதமாகத் தன் இரசாயன சாலைக்குச்சென்று உடனே திரும்பி வந்ததால் பெருமூச்சு விட்டுக் கொண்டு இவர்கள் எதிரில் வந்தான். அவன் ஒரு சிப்பம் கையில் கொண்டு வந்தான். அதை யெடுத்து மேஜைமேல் வைத்துக் கொண்டே "யாரேனும் கூப்பிட்டார்களோ?" என்றான்.

ஜெகநாதன் நடந்த சங்கதியைச் சுருக்கமாய்க் கூறி னான். கிருஷ்ணராவ் தலையசைத்துச் சற்றும் வியப்படை யாதவன்போல் அதற்குப் பதில் ஒன்றும் கூறாமலே, "இதோ இதை யிந்த டெலிபோனில் முன்னே பிணைக்க வேண்டும்" என்று கூறிக்கொண்டே தான் கொண்டு வந்த சிப்பத்தை யவிழ்த்து அதிலிருந்த கருவிகளை யங்கிருந்த டெலிபோன் கருவியோடு இணைக்கத்தொடங்கினான்.

ஜெகநாதன், கிருஷ்ணராவ் கொண்டு வந்தது இன்ன தென்று தெரியாததால், "இது என்ன கருவி?" என்றான்.

கிருஷ்ணராவ்:—"இது இப்போதுதான் பூரணமாகக் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு கருவி. இது போனகிராப் போன் றது. இதை டெலிபோனில் சம்பந்தப்படுத்தி வைத்து விட்டால் இது சங்கதிகளை யப்படியே பதியவைத் துக் கொள்வதோடு, போனகிராப் போல் மறுபடி எப் போது வேண்டுமாயினும் அச்சங்கதிகளைக் கூறும். ஒரு

வன் பேசும்போது அவன் குரல் அப்போதுதான் தெரிகிறது. அதிலும் சிலருக்குக் குரலை யறிந்து கொள்ளவே முடியாது. இக்கருவியால் பிறகு எப்போது வேண்டுமாயினும் அதே சங்கதியை யவன் கூறுவதுபோலவே மறுபடி கேட்டுக் குரலால் ஆளை யின்னவனென்றுணரலாகும்" என்று கூறினன்.

சற்று நேரத்தில் கிருஷ்ணராவ் தான் கொண்டு வந்த கருவியை யங்கிருந்த டெலிபோனில் இணைத்து விட்டான். அதன் பிறகு இவர்கள் என்ன சமாசாரம் வருகிறதோ வென்று காத்துக்கொண் டிருந்தார்கள். கருணாகரம் பிள்ளை "அடடா! இத்தகைய படுமோசமான தந்திரச் செயலை நான் இதுகாறும் கண்டதுமில்லை கேட்டதுமில்லை" என்று கோபத்தோடு கூறினர்.

கிருஷ்ணராவ், "ஆயினும்—அவன் எத்தகைய சாமார்த்தியவானாயினும்—நாம் அவனைக் கண்டு பிடித்து விடலாம். ஆனால் அவன் அசாத்தியமான போக்கிரியாகவே யிருப்பான் என்று நான் நம்புகிறேன்" என்றான்.

சற்றுநேரங் கழித்து டெலிபோனில் மணி யடித்தது. கருணாகரம் பிள்ளை யதைக் கேட்டுப் பதிலளிக்கப் புறப்படும்போது கிருஷ்ணராவையும் ஜெகநாதனையும் நோக்கி "நீங்கள் பக்கத்தறையில் போய்க் கேட்டுக்கொண்டிருங்கள்" என்றார். ஏனெனில் அங்கும் டெலிபோன் கருவியிருக்கிறது. அதற்கும் அவர் இருக்கும் அறையிலிருக்கும் டெலிபோனுக்கும் சம்பந்தமிருக்கிறது. அதனால் இங்கு வரும் சங்கதியும் அளிக்கும் பதிலும் இரண்டும் அங்கும் கேட்கும். அவர்கள் அவ்வாறே சென்றார்கள்.

கருணாகரம் பிள்ளை:—"ஆம் நான் கருணாகரம்பிள்ளை தான்" என்றார்.

பதிலுக்கு, "இது வடக்கு வீதி தினசரிப் பத்திரிகை.

இலக்ஷ்மணசாமிப் பிள்ளையும் அவன் ஆட்களும் நகர சீர் திருத்த ஒப்பந்தத்தை யெடுக்க முயன்றதில் அடியோடு தோல்வியடைந்து விட்டார்களென்ற வதந்தி தங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்" என்று வந்தது.

கருணாகரம் பிள்ளை:—"இல்லை. நான் அதைப்பற்றிக் கேள் விப்படவில்லை" என்றதே கிருஷ்ணாராவ் சட்டென்று போய் அதற்குமேல் கூறவேண்டாம் என்று சமிக்கை செய்தான். அதன்மேல் அவர் "அவ்விஷயத்தைப் பற்றிப் பத்திரிகைக்குக் கூற நான் எவ்வித அபிப்பிராய மும் வெளியிட முடியாது" என்று கூறிவிட்டார். அவர் உடனே யெந்திரத்தை மூடி விட்டதால் அவர் கள் மறுபடி எதுவும் கேட்க அவகாசமில்லை.

இரண்டொரு நிமிடங்கள் கழித்து மறுபடி மணியடித் தது. அப்போது கிருஷ்ணாராவ் "கருணாகரம் பிள்ளை வெளி யில் சென்று விட்டார். மறுபடி இப்போது வரமாட்டார்" என்று கூறி விட்டான்.

பிறகு அவன் கருணாகரம் பிள்ளையை நோக்கி "தாங் கள் இப்போது நேராய் வடக்குவீதி தினசரிப் பத்திரிகா சிரியரைக் கூப்பிட்டுக் கேளுங்கள்" என்றான்.

கருணாகரம் பிள்ளை கூப்பிட்டதும் பத்திரிகாசிரியர் "யார்?" என்றார். அவர் "இது துரைத்தன வக்கீலின் காரியாலயம். நான் கருணாகரம் பிள்ளை. நீர் இப்போது என் னிடம் பேசினீரல்லவா?" என்றார்.

அப்பத்திரிகாசிரியர் "யார் நானா தங்களிடம் பேசி னேன்?" என்று மிக்க வியப்போடு கேட்டார். கருணாகரம் பிள்ளை "ஆம்; வடக்கு வீதியில் உண்டான பிரஸ்தாபத் தைப்பற்றி" என்றார். பத்திரிகாசிரியர் "வடக்கு வீதியில் பிரஸ்தாபமா? எனக்கொன்றுமே தெரியாது. நான் தங்க

ளைக் கூப்பிட்டுப் பேசவேயில்லை. ஏதோ சூது நடந்திருக்க வேண்டுமென்று கருதுகிறேன்" என்றார்.

கருணாகரம் பிள்ளை:— "ஓகோ! அப்படித்தானிருக்க வேண்டுமென்று தெரிகிறது. தங்களுக்கு வீண் சிரமம் கொடுத்ததற்காக மன்னிக்கவேண்டுகிறேன். மிக்க வந்தனம்" என்று கூறி விட்டுக் கிருஷ்ணராவையும் ஜெகநாதனையும் மாறி மாறி நோக்கினார். கடைசியில் மிக்க கோபத்தோடும் வெறுப்போடும் "பார்த்தீர்களா! இத்தகைய சங்கதிதான் காலையில் நடந்தது. அக்கள்ளப்பயல், முன்பு பேசியவன், என் பெயரால் என்னென்ன பிரஸ்தாபமுண்டாக்கி விடுவானோ நமக்கெப்படித் தெரியும்?" என்றார்.

ஜெகநாதனுக்கு அந்த ஒனாய் போன்ற கள்ளன் யாரென்று விளங்கவில்லை. கிருஷ்ணராவோ தனக்குள் யார் மேலோ சந்தேகமுண்டாகி யிருப்பதோடு அதை ருசுப்படுத்தக் கூடிய நம்பகமுமிருந்தாலும் இன்னும் அதைப் பற்றிய விஷயத்தை வெளியிட அவன் விரும்பவில்லை.

அவன் சாவதானமாய் "அந்த ஒனாய் இரண்டு பேர்களில் ஒருவனாகவிருக்கலாகும்" என்று கூறிவிட்டு டெலிபோனில் துர்க்கையனைக் கூப்பிட்டான். ஜெகநாதனும் கருணாகரம் பிள்ளையும் இவன் என்ன பேசுகிறானோ பார்ப்போமென்று மிக்க ஆவலோடு நோக்கிக்கொண் டிருந்தார்கள். ஆனால் கிருஷ்ணராவோ பதில் தான் தவறான ஆளைக் கூப்பிட்டதாகச் சொல்லிவிட்டான். இவ்வாறே மதுரை நாயகம் பிள்ளை வைக்கப்பட்டிருக்கும் வைத்திய சாலையின் காரியஸ்தனைக் கூப்பிட்டு "நான் மதுரை நாயகம் பிள்ளையின் வீட்டு வைத்தியன். அவரிடம் இரண்டொரு விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டும். அவர் விஷயமறிந்து பேசக்கூடிய நிலைமையிலிருக்கிறாரா?" என்று கேட்டான்.

கருணுகரம் பிள்ளை:—"அவன் எத்தகைய நிலைமையிலிருக்கிருனும் ?" என்று கிருஷ்ணுராவைக் கேட்டார். ஏனெனில் அவர் மதுரைநாயகம் பிள்ளை யுண்மையில் புத்தி சுயாதீனத்தை யிழந்து விட்டிருக்க மாட்டானென்றும், வேணுமென்றே பாசாங்கு செய்கிருனென்றும் கருதியிருந்தார்.

கிருஷ்ணுராவ் இல்லையில்லை யென்று தலையசைத்து "அவன் மிக்க குழப்பமான நிலைமையிலேயே யிருக்கிருன் போற் காண்கிறது" என்று கூறிவிட்டு எந்த டெலிபோனின் எண்ணை யறிவதற்கோ புத்தகத்தைப் பார்க்கத் தொடங்கினுன்.

20—வது அத்தியாயம்.

டெலிபோன் எண்களுள்ள புத்தகத்தைச் சற்று நேரம் பார்த்தபின் கிருஷ்ணுராவ், வக்கீல் கனகசபைப் பிள்ளையைக் கூப்பிட்டான். பிறகு இலக்ஷ்மண சாமியைக் கூப்பிட்டான். கனகசபைப்பிள்ளை இரண்டிடங்களில் காரியாலயங்கள் வைத்துக்கொண் டிருப்பதால் அவன் இருக்குமிடம் அகப்படச் சற்றுநேரம் சென்றது. கிருஷ்ணுராவ் இருவரிடமும் யார் என்ன என்று இரண்டொரு வார்த்தைகள் கேட்டு விட்டு அவர்களிடமிருந்து பதில் வந்ததும் "நான் தவருன எண்ணைக் கூப்பிட்டு விட்டேன். வீண் சிரமமளித்ததற்கு மன்னிக்க வேண்டும்" என்று கூறி விட்டான்.

ஆனுல் இச்சந்தர்ப்பங்களிலெல்லாம் தான் கொண்டு வந்த கருவி சரியாக வேலை செய்யும்படிச் சாக்கிரதையாய்க் கவனித்துக்கொண் டிருந்தான். அவன் வைத்த கருவியில் ஒவ்வொருவர் பேசியதும் அப்படியப்படியே பதிந்து விட்

டது. பிறகு மறுபடி மறுபடி எப்போது வேண்டுமாயினும் அதே வார்த்தைகளை யக்கருவி கூறும். அப்போது நிதான மாய்க் கவனித்துக் குரலாலும் மற்ற விஷயங்களாலும் ஆட்களை யாரென்று அறிந்து கொள்ளலாகும்.

கருணாகரம்பிள்ளை என்ன சங்கதி யென்பதுபோல் கிருஷ்ணாராவை நோக்கினர். கிருஷ்ணாராவ் "நான் இப்போது மறுபடி என் இரசாயன சாலைக்குச் செல்லவேண்டும். நான் இப்போது செய்ய உத்தேசித்திருக்கும் சோதனையை முடிக்கக் கொஞ்சம் காலம் செல்லும்; ஆயினும் என்னால் கூடிய வரையில் அதைத் துரிதமாகச் செய்வேன். அதைப்பற்றி யிப்போது ஒன்றும் நிச்சயமாகக் கூற முடியாது" என்று கூறிவிட்டு அங்கிருந்த டெலிபோனோடு பிணைத்து வைத்திருந்த தன் இரகசியக் கருவியைப் பிரித்தெடுத்து மூட்டை கட்டிக்கொண்டான். உடனே கிருஷ்ணாராவும், ஜெகநாதனும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

கருணாகரம்பிள்ளை மாலையில் வந்து அவர்களைக் காண்பதாகக் கூறினர். கிருஷ்ணாராவும் ஜெகநாதனும் புறப்பட்டு நேராக இரசாயன சாலைக்குச் செல்லவில்லை. வழியில் ஒரு டெலிபோன் காரியாலயத்தில் தங்கினர்கள். அங்குக் கிருஷ்ணாராவ் டெலிபோனில் கண்ணம்மாளைக் கூப்பிட்டு "தவருமல் உபயாம்பாள் மேல் விடாது கண் வை. அல்லது உன் ஆட்களில் நம்பகமான ஒருவரைக் கொண்டாயின் அதைச் செய்யத் தவறவேண்டாம்" என்று கூறினன்.

கிருஷ்ணாராவ் அன்று முழுமையும் தன் சோதனை வேலையிலிருந்தான். மாலை பொழுது அமரும் சமயம் கண்ணம்மாளிடமிருந்து அவள் உபயாம்பாள் மேல் வேவு வைத்த சங்கதியைப் பற்றிய முதல் சமாசாரம் வந்தது. உபயாம்பாள் பூபாலன் காபி ஹோட்டலில் நடுப்பகல் இலக்ஷ்மணசாமிப்பிள்ளையைச் சந்தித்ததாகவும், இருவரும்

நெடுநேரம் மிக்க சிரத்தையோடு சம்பாஷித்ததாகவும் தெரிந்தது. அது கிருஷ்ணராவுக்கும் ஜெகநாதனுக்கும் சற்றும் வியப்பை யுண்டாக்கவில்லை. இன்னொரு விஷயமே மிக்க வியப்பை யுண்டாக்கிற்று. அதாவது இவர்கள் உபயாம்பாள் மேல் வேவு வைத்திருப்பதைப் போல் இன்னொருவர் யாரோ அவள் மேலேயே வேவு வைத்திருக்கிறதாய்த் தெரிய வந்தது.

கிருஷ்ணராவ் அதைக் கேட்டதும் மிக்க வியப்படைந்தாலும் வெளிக்கு ஒன்றுமே காட்டவில்லை. இன்னும் யாருக்கோ உபயாம்பாளின் காரியங்களைக் கவனிப்பதில் அக்கறை யிருப்பதாய்த் தெரிந்தது. இந்தமர்மம் என்னவென்பதே விளங்கவில்லை. ஜெகநாதன் துர்க்கையன் செய்திருப்பானே வென்று கருதினன். உபயாம்பாள் அன்று தன் வீட்டில் நடந்த விருந்திற்குத் தன் காரியஸ்தனுகிய மதுரைநாயகம் பிள்ளையோடு வந்திருந்ததால் அவள் அவனேடுதான் நட்புக்கொண்டிருக்கிருள் என்று துர்க்கையன் கருதியிருந்தான். இப்போது அவள் தன் எதிரியாகிய இலக்ஷ்மணசாமியிடம் மிக்க நட்புக்கொண்டிருக்கிருளோவென்று அவனுக்குச் சந்தேக முண்டாகியிருக்குமோவென்று ஜெகநாதன் கருதினன்.

அதற்குள் அவனுக்கு இன்னொரு ஆலோசனை தோன்றியது. அதாவது "உபயாம்பாளின் கணவன் மாரப்பனுக்குத் தன் மனைவியின் நடக்கைகளில் சந்தேகம் உண்டாகிவிட்டதோ? அப்படித் தன் மனைவி இலக்ஷ்மணசாமிப் பிள்ளையைச் சந்தித்தது அவனுக்கு இப்போது தெரிந்துவிடும். பிறகு என்ன நடக்குமோ?" என்று சிந்தித்தான்.

கிருஷ்ணராவ் தன் இரகசிய ஆராய்ச்சியைச் செய்து முடித்தபின் அது சரியாக விருக்கிறதாவென்று ஒத்திட்டுப் பார்க்கத் தொடங்கினன். அச்சமயம் கருண

கரம்பிள்ளை தான் கூறியபடி யங்கு வந்து விட்டார். அவர் வந்ததும் மிக்க வியப்போடு கிருஷ்ணராவ் செய்யும் வேலையைப் பார்த்து "நீ என்ன செய்கிறாய்?" என்று வினவிவிட்டு "கிருஷ்ணராவ் நான் என்ன செய்தேன் தெரியுமா? திருஷ்டாந்தமாக ஒன்று கூறுகிறேன். மதுரை நாயகம் பிள்ளையைப் பைத்தியக்கார சாலைக்குக் கொண்டுபோ யிருக்கும் விஷயத்தைப்பற்றி விசாரித்தேன். மேலுக்கு எல்லாம் சரியாகவே தோன்றுகிறது. அவன் உள்ளே பலவிதமான சுகக் குறைவுகளை யனுபவித்துக்கொண்டிருந்தானும். அச்சங்கதி யவனுடைய நெருங்கிய நண்பர்களுக்குக்கூடத் தெரியாமலிருந்ததாம். அக்குறைகள் கடைசியில் மூளையைத் தாக்கிப் புத்தியைக் கெடுத்து விட்டனவாம். ஆயின் இவ்விஷயத்தில் 'அவனுடைய நெருங்கிய நண்பர்கள்' என்றதை நான் விரும்பவில்லை. ஒருவன் அவன் சொந்த வீட்டு வைத்தியன். அவனைப்பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. மற்ற நண்பர்களில் தூர்க்கையன் ஒருவன்" என்றார்.

கிருஷ்:—"நாம் இதைப்பற்றி நன்றாய றியவேண்டும். இப்போது உம்மைப்பற்றிப் பலவிதக் குழப்பமான புரளிகளை யுண்டாக்கிக்கொண் டிருக்கும் அந்த "ஒனய்" யார் என்றறிய விரும்புகிறீரா?" என்றான்.

கருணாகரம்பிள்ளை ஆவலோடு "அறிய விரும்புகிறேன் என்பதில் சந்தேகமோ? நீ அக்கள்ளனைப்பற்றிக் கூறும் அபிப்பிராயம் முழுமையும் சரியே. அவன் பிறகு கூட சும்மா இல்லை. தன் வேலையைச் செய்துகொண்டே யிருக்கிறான். அவன் துணிகரத்தைப் பார்! நான் கூப்பிடுவதாக அழகாம்பாளைக் கூப்பிட்டுக் காணமற் போயிருக்கும் இரத்னபாய் என்பவளைப்பற்றி ஏதேனும் புலம் அகப்பட்டதா என்று கேட்டிருக்கிறான். அழகாம்பாள் அவ்விஷயத்தில் சிரத்தை வைத்துககொண் டிருக்கிற ளென்பதை யவர்கள் எப்படி

யறிந்து கொண்டார்கள் என்று நீ நினைக்கிறாய்?" என்றார்.

கிருஷ்:—"அது மிக்க கஷ்டமான காரியமல்ல. அழகாம்பாள் தன் கூட்டத்தார்கள் சிலரிடம் அச்சங்கதியைப்பற்றிப் பேசி யிருப்பாள். எதிரிகளின் வேவு ஆட்கள் அத்தகைய விடங்களை மிக்க அக்கரையாய்க் கவனிக்கிறார்கள். இருக்கட்டும்; ஒனாய் கேட்டதற்கு அழகாம்பாள் என்ன பதில் கூறினாள்?" என்று வினவினான்.

கருணாகரம் பிள்ளை:—"அவள் ஒன்றுமே கூறவில்லை. நற்காலமாய் அவர்கள் அம்மாதிரிக் காரியம் செய்வார்கள் என்று நான் சந்தேகித்து முன்னாடியே அழகாம்பாளிடம் 'ஏதேனும் டெலிபோன் சமாசாரம் வந்தால் அது என்னிடமிருந்து தான் வந்ததென்று நிச்சயமாய்த் தெரிந்தாலன்றி அவற்றைக் கவனிக்கவே வேண்டாம்' என்று கூறியிருந்தேன். நாங்கள் எங்களுக்குள் ஒரு குறிப்பு வார்த்தை வைத்துக்கொண்டோம். ஆகையால் இச்சந்தர்ப்பத்தில் ஒனாயால் ஒன்றும் முடியாது. உனக்கு ஏதோ உளவு அகப்பட்டதென்கிறாயே? அது எப்படி யகப்பட்டது?" என்றார்.

அதன்மேல் கிருஷ்ணாராவ் தான் புதிதாகக் கண்டுபிடித்த போனகிராப் (பேசியதைக் கிரகித்துக்கொண்டு மறுபடி கூறும் கருவி) போன்ற எந்திரம் வேலைசெய்யும் விதத்தைக் கூறி அக்கருவியைக் கொண்டு குரலின் வித்தியாசங்களைத் தான் எவ்வாறு கண்டு பிடிப்பது என்ற வழியையும் அவருக்கு விளங்கும்படி கூறினான்.

அவையாவும் கேட்டதே கருணாகரம் பிள்ளை சொல்லொணா வியப்படைந்து "ஓ! அப்படியாயின் இம்மார்க்கமாய் ஒருவர் குரலைக் கண்டு பிடித்து விடுவேன் என்று கூறுகிறாய்?" என்றார்.

கிருஷ்ணராவ்:—"ஆகா சந்தேகமின்றிக் கண்டறிவேன்" என்று கூறித் தன் கருவியைக் கொண்டு எப்படிக்குரலை யறிவது என்பதை யவருக்கு விளங்கும்படிச் செய்து திருஷ்டாந்தமான அத்தாட்சிகளைக் காட்டிக் கடைசியில், "இப்போது தெரிகிறதா? உமக்கு இவ்வளவு இன்னலை யுண்டாக்கும் ஒனாய் வேறுயாருமல்ல; உமது பழைய நண்பனாகிய வக்கீல் கனகசபைப் பிள்ளையே" என்றான்.

கருணாகரம்பிள்ளை:—"ஓகோ! அவன் தன் வழக்கப்படி சூதான வழியில் வேலை செய்கிறானே?" என்று மிக்க வெறுப்போடு கூறினார்.

கிருஷ்ணராவ்:—"அக்கறுப்புப் புத்தகத்தைக் கைப்பற்ற முயற்சி செய்கிறான். தாங்கள் சற்று நிதானமாகச் சிந்தித்தால் தங்கள் மேலும் இலக்ஷ்மணசாமி மேலும் ஏககாலத்தில் அவநம்பகத்தை யுண்டாக்க அவன்வேலை செய்கிறான் என்று நன்கு விளங்கும். அதாவது ஒரே யம்பில் இரண்டு பட்சிகளையும் அடித்து விடலாம் என்ற நோக்கத்தோடு அவன் வேலை செய்கிறான். அதனால் தான் ஒரு ஆபத்துமின்றித் தப்பித்துக் கொள்ளலா மென்பது அவன் கருத்து" என்றான்.

கருணாகரம்பிள்ளை:—அவனுடைய சூதுவாதுகளி லிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள நாம் முயல வேண்டியதே.

கிருஷ்:—"அவனைத் தாங்கள் நேரில் அழைத்து 'உன் கதைகளெல்லாம் எனக்குத் தெரியும். இக்குற்றங்களை யெல்லாம் உன்மேல் சாட்ட என்னால் முடியும்' என்று தாங்கள் கூறுவதில் எனக்குச் சற்றும் ஆக்ஷேபணையில்லை. ஆனால் நாம் இதை யெப்படி யறிந்து கொண்டோம் என்பதை யவனுக்கறிவிக்க லாகாது" என்றான்.

கருணாகரம் பிள்ளை உடனே டெலிபோன் மூலமாய்க் கனகசபைப் பிள்ளையைக் கூப்பிட்டார். அவன் தன் இரண்டு காரியாலயங்களிலும் இல்லை. பரசுராமன் ஹோட்டலிலு மில்லை. ஆனால் ஒவ்வொரு விடத்திலும் இவர் கூறிய சங்கதியை யவன் வந்த வுடனே தெரிவிக்கும்படி கூறிய தால் எவ்விதத்திலேனும் அவனுக்குச் சங்கதி யெட்டா மற் போகாது.

கிருஷ்ணராவ் அதன்பின் தான் புறப்பட எழுந்து கருணாகரம் பிள்ளையை நோக்கி, "தாங்கள் மதுரை நாயகம் பிள்ளை பைத்தியக்கார வைத்திய சாலைக்குக் கொண்டு போகப் பட்டதைப்பற்றிக் கூறிய விஷயத்தில் எனக்குச் சிரத்தை யுண்டாகி யிருக்கிறது. முக்கியமாய்த் தாங்கள் அச்சம் பந்தத்தில் துர்க்கையனைப் பற்றிக் கூறிய விஷயத்தால் அதைப்பற்றிக்கேட்டது முதல் நான் அதைச் சிந்தித்துக் கொண்டே யிருந்தேன். அவனை நானே நேரில் காண விரும்புகிறேன்" என்றான்.

அதைக் கேட்ட கருணாகரம் பிள்ளை சற்று தடுமாற்றத் தோடு சிந்தித்தார். பிறகு "இன்று இரவு நான் ஒரு இடத் தில் பேச ஒப்புக் கொண்டேன். அதை விட்டு விடுகிறேன். ஆம், நானும் உன்கூட வருகிறேன். கட்டிடத்தின் மேல் பாகத்தைக் கவனிப்பதைவிட அதன் அஸ்திவாரத்தைக் கவ னிப்பது மிக்க நலம்" என்றார்.

சற்று நேரங்கழித்துக் கிருஷ்ணராவ், ஜெகநாதன், கருணாகரம் பிள்ளை மூவரும் புறப்பட்டு மதுரைநாயகம் பிள்ளை வைக்கப்பட்டிருக்கும் பைத்தியக்கார வைத்திய சாலைக்குச் சென்றார்கள். பைத்தியக்கார வைத்திய சாலை யென்றால் இப்போது நமது நாட்டிலும் மற்ற நாடுகளிலு முள்ள துரைத்தனத்தாரால் தாபிக்கப்பட்ட சாலைகள் போன்றதல்ல. வைத்தியர் என்ற பட்டம் பெற்றவர்கள் தாங்களே

சொந்தத்தில் அமைத்துக் கொள்வது. அக்காலத்தில் அம் மாதிரி யிருந்தது. அதனால் அனேக அக்கிரமங்களும் நடந்து கொண்டிருந்தன. எப்படியெனில் ஒருவனுக்குத் தன் தமையன் புதல்வன் இன்னும் விவகார தசைக்கு வரவில்லை யென்று வைத்துக் கொள்வோம். அவன் விவகார தசைக்கு வருமட்டும் இறந்தவன் தன் தம்பியை நம்பி அவனையே தன் புத்திரனுக்குத் தக்க வயது வருமட்டும் முழு ஆஸ்திக் கும் பாதுகாவலனாக வைக்கிறான். இத்துஷ்டன் தன் தமை யன் சொத்து முழுமையும் அபகரிக்க எண்ணி இரகசியமாய் இரண்டு வைத்தியர்களுக்கு இலஞ்சம் கொடுத்துப் பைய னுக்குப் புத்திசபலித்து விட்டிருக்கிறதென்று அத்தாட்சிப் பத்திரம் வாங்கிக் கொள்கிறான். பிறகு அவன் மேல்கண்ட படி பைத்தியக்கார வைத்தியசாலை வைத்துக் கொண்டிருப் பவனிடம் சென்று நான் உனக்கு மாதம் நூறு ரூபாய் அப்பையனுடைய சிகிச்சை உணவு முதலியவற்றிற்களிக் கிறேன் என்கிறான். பணத்துக் காசைப்பட்டு அவன் ஒப்புக் கொள்கிறான்.

அவ்வாறு இரண்டு வைத்தியர்கள் ஒருவன் பைத்தியக் காரன் என்று அத்தாட்சிப் பத்திரங் கொடுத்து விட்டால், பாதுகாவலர் (கார்டியன்) பிரியப்படி வைத்தியசாலை வைத் திருப்போரே, பைத்தியக்காரன் என்று கூறப்பட்டவனை வந்து தந்திரமாகப் பிடித்துப் போய் விடுவார்கள். ஒரு முறை யதற்குள் கொண்டு போகப்பட்டால் பிறகு அதி னின்று தப்பி வருவது கஷ்டம்.

பைத்தியமில்லாத ஒருவனை யப்படிக் கொண்டுபோய் நடத்தினால் அவனுக்கு 'வியாகூலமும், ஒவ்வொரு சமயமும் கோபத்தால் ஆத்திரமும் உண்டாய் விடுகின்றன. அப் போது அவர்கள் ஓகோ பைத்தியம் முரட்டுத் தனத்திற்கு வந்து விட்டதென்று விலங்கு போடுவது, அடிப்பது முத

விய விதங்களால் அவனை யிம்சிக்கிறார்கள். அவன் கூறுவ தெல்லாம் உண்மையாயினும் அவனை விட்டுவிட்டால் அவன் மூலமாக வரும் வருமானம் போய்விடு மென்று அவன் பேச்சு முழுமையும் புத்திசபலத்தால் பேசுவதென்று முன் னாடியே வதந்தி யுண்டாக்கி விடுகிறார்கள். எத்தகைய தை ரியசாலியும் இம்மாதிரி அநீதத்தை யனுபவிக்கும் போது வியாகூலத்தால் புத்தி கலங்கி, மனமுடைந்து தெய்வத்தி னிடம் நம்பிக்கையும் ஒழிந்து மெய்யாகவே பைத்தியக்கார னாகிவிடுவது சுபாவமே. பிறகு அவனுக்கும் மயான பூமிக் கும் தூரம் அதிகமில்லை. அக்கிரமஸ்தன் ஆஸ்தி முழுமைக் கும் சொந்தக்காரனாகி விடுகிறான்.

இங்கிலாந்தில் இத்தகைய விவகாரம் நெடுநாள் நிகழ்ந்து கடைசியில் ஆண்டவன் கிருபா நோக்கத்தால் எத்தகைய அக்கிரமமும், அக்கிரமஸ்தர்களும் கடைசியில் அழிவது போல் ஜனங்களின் முயற்சியாலழிந்தது.

அத்தகைய பைத்தியக்கார சாலையில் தான் இப்போது மதுரைநாயகம் பிள்ளையும் போயிருக்கிறான். ஆனால் இவன் மேற்கண்ட மாதிரி இன்னொருவருடைய அக்கிரம முயற்சி யால் கொண்டுபோகப்படவில்லை. அத்தகைய விடத்தில் ஒருவன் "நான் பைத்தியம் பிடித்தவன்போல் அபிநயிக் கிறேன். என்னை நீங்களும் ஆம் ஆம் என்று கூறி வைத் துக்கொண் டிருங்கள்" என்றால் பணத்திற்குச் சுலபமாகச் செய்வார்கள். அப்படித்தான் இருக்கவேண்டுமென்று நாம் சந்தேகிக்கிறோம். இப்போது கிருஷ்ணராவ் ஜெகநாதன், கருணாகரம்பிள்ளை மூவரும் அந்த விஷயத்தை யறியவே சென்றிருப்பதால் உண்மை சீக்கிரத்தில் வெளியாகும். இனி கதையைத் தொடர்ந்து செல்வோம்:—

அவர்கள் மூவரும் புறப்பட்டுச் சென்றபோது ஜெக நாதன் "நாம் அங்குச் சென்றால் நம்மை யுள்ளே விடுவதே

கஷ்டம். அப்படி விட்டாலும் மதுரைநாயகம் பிள்ளையை நாம் பார்க்கும்படி விடுவார்களென்று நான் நினைக்கவில்லை" என்றான்.

கடைசியில் இவர்கள் அங்குப் போய்ச் சேர்ந்தார்கள். அந்த வைத்தியசாலையிருக்கும் கட்டிடம் ஒருநாட்டுப்புராதன மாளிகை. இவர்கள் அங்குச் சென்றபோது கையெழுத்து மறையும் வேளையாகிவிட்டது. இவர்கள் வாயிற்படியருகில் வண்டியை விட்டிறங்கி யுள்ளே செல்லவேண்டு மென்ற போது சற்றும் ஆக்ஷேபனையின்றி விடப்பட்டதே ஜெக நாதனை சொல்லொணு வியப்படைந்து விட்டான்.

இவர்கள் சற்று நன்றாயலங்கரிக்கப்பட்ட முன்னறை யில் காக்கவேண்டி யிருந்தது. அப்போது உள்ளே யிருந்து ஏதோ சந்தடிகள் பல பாகங்களிலுமிருந்து வந்தன. ஏதோ விசேஷம் நடந்திருப்பதாகப் புலப்பட்டது. ஏனெனில் எல் லாம் ஒழுங்கு தவறியிருந்தன. ஜெகநாதனை கவனமாக உற் றுக்கேட்டான். பைத்தியக்கார சாலைகளில் வியாதியஸ்தர் எப் படி நடத்தப்படுகிறார்களென்பதும், அங்கு நடக்கும் விவ காரங்கள் எப்படி நடைபெறுகின்றனவென்பதும் ஜெகநாத னுக்கு அவ்வளவாய்த் தெரியமாட்டா. ஆயினும் அச்சமயம் அங்கு நடப்பதாகத் தெரிந்த குழப்பத்தால் ஏதோ அதிருப்தியான விவகாரம் நடை பெற்றிருக்கிறதென்று தோன்றியது. முன்பு ஒரு பைத்தியக்கார சாலையில் பைத் தியக்காரர்கள் ஒன்று சேர்ந்து காவலர்களை யடித்து விட்டு ஓடி விட்டார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறான். அப்படி யேதேனும் நடக்கிறதோ என்று சிந்தித்தான்.

கடையில் ஒரு வேலைக்காரன் அவ்வழியாய்ச் சென் றான். இவர்கள் வந்தது முதல் பல வேலைக்காரர் அவ்வழிச் சென்றார்கள். ஒருவரேனும் இவர்களைக் கவனிக்கவில்லை. இவனும் அப்படியே சென்றான். ஆனல் இன்னொருவன்

வரும்போது காலடிச்சத்தம் கேட்டதும் கிருஷ்ணராவ் எழுந்து சென்று வாயிற்படி யெதிரில் நின்று அவன் அருகில் வந்ததும் "அய்யா! நாங்கள் மதுரைநாயகம் பிள்ளையைப் பார்க்க வந்தோம்" என்றான்.

வேலையாள் ஒரு மாதிரியாக இவர்களை நோக்கினான். "ஒருவரையும் உள்ளே விட உத்திரவில்லை" என்று அவன் கூறுவான் என ஜெகநாதன் எண்ணினான்.

ஆனால் அவனோ "ஐயா! நீங்கள் மிக்க காலங் கடந்து வந்தீர்களென்று அஞ்சுகிறேன்" என்றான். கிருஷ்ணராவ் திடுக்கிட்டு "காலங்கடந்தா? என்ன உன் அர்த்தம்?" என்றான்.

வேலைக்காரன் நேராய் விடையளிக்கவெண்ணியவன் போல் "மதுரைநாயம் பிள்ளை இன்று மாலைப்போது போசனம் அருந்தியதும் காவலர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு எப்படியோ ஓடிப்போய் விட்டார். எங்குத்தேடியும் அகப்படவில்லை" என்றான்.

21—வது அத்தியாயம்.

மதுரைநாயகம் பிள்ளை பைத்தியக்கார சாலையிலிருந்து ஓடி விட்டதால் கிருஷ்ணராவ் முதலியவர்கள் செய்த ஆலோசனைகளெல்லாம் குழப்பத்தில் விழுந்து விட்டன. கிருஷ்ணராவ் கூட ஒன்றும் கூற முடியாமல் பேசாமலிருந்தான்.

அன்றிரவு நெடுநேரமாயும் மதுரைநாயகம் பிள்ளையெங்கிருக்கிறானென்று தெரியவில்லை. எங்கும் அதைப் பற்றிப் பெருங் குழப்பமாகமட்டுமிருந்தது. மறுநாள் காலை பத்திரிகைகளிலெல்லாம் அவன் ஆச்சரியமாக மறைந்து விட்ட சங்கதியைப்பற்றிக் கூறப்பட்டிருந்ததேயன்றி அவன்

அகப்படுவதைப்பற்றி ஒரு சங்கதியுமில்லை. அன்று முழுதும் அதிகாரிகள் அவனைத் தேடிக்கொண் டிருந்தார்கள். ஆனால் ஒரு பயனுமில்லை.

துரைத்தனத்தாருக்கும், போலீஸாருக்கும், பொது ஜனங்களுக்கும் அவ்வளவு நன்றாகத் தெரிந்த மனிதன் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் மறைந்துகொண் டிருக்கிறான் என்பது மிக்க வியப்பாகவே யிருந்தது. ஆயினும் இம்மாதிரி சம்பவங்கள் முன்பு நேர்ந்திருந்தாலும், பைத்தியம் பிடித்தவனாகக் கூறப்பட்ட ஒருவன் மறைந்திருப்பது அசம்பாவிதமாகவே புலப்பட்டது.

அன்றும் ஒரு விசேஷமும் நேரிடவில்லை. துரைத்தன விஷயமாய் அவயவிகள் தெரிந்தெடுக்கப்படுவதில் இவர்களுக்குள்ள போராட்டம் முடியவேண்டிய காலம் மட்டும் நெருங்கிவிட்டது. வக்கீல் கனகசபைப்பிள்ளையின் துஷ்டச் செயல்களைக் கிருஷ்ணராவ் வெளிப்படுத்தியது முதல் அவன் தன் தந்திரங்களை வேறு வழியில் மாற்றிவிட்டு இவர்கள் எதிரில் வாராமலே மறைந்து கொண்டான். உபயாம்பாள் இலக்ஷ்மணசாமிப் பிள்ளையோடு விருந்துண்ணச் சென்றாள். கிருஷ்ணராவையன்றி வேறு யாரோ ஒருவர்கூட அவள் மேல் வேவு வைத்திருப்பதாய்க் கூறியது அவள் கணவனாகிய மாரப்பனாயிராது என்று மட்டும் புலப்படுகிறதேயன்றி யார் என்று இன்னும் தெரியவில்லை.

கறுப்புப் புத்தகத்தை யார் களவாடியிருந்தாலும் அவர்கள் இன்னும் உபயோகப்படுத்தாமலே யிருந்தது வியப்பாகவே யிருந்தது. அன்றிரவு கிருஷ்ணராவும் ஜெகநாதனும் போசனம் முடிந்தபின் மதுரைநாயகம் பிள்ளை மறைந்து கொண்டிருப்பதைப்பற்றிச் சிந்தித்தார்கள். மாலைப் பத்திரிகைகளில் விசேஷமொன்றுமில்லை. அச்சமயம் யாரோ கதவைத் தட்டுவதைக் கேட்டு ஜெகநாதன் சென்று திறந்தான்.

ஒரு வாலிபன் அவனிடம் ஒரு கடிதத்தை நீட்டிக்கொண்டே "கிருஷ்ணராவுக்கு கருணாகரம் பிள்ளையிடமிருந்து ஒரு சமாசாரம்" என்றான்.

வந்தவன் கருணாகரம் பிள்ளையின் வேலையாளென்று ஜெகநாதன் தெரிந்துகொண்டு சரிதான் என்றான். கிருஷ்ணராவ் கடிதத்தை வாங்கி வாசித்து விட்டு "சரிதான்; இப்போதே பதிலளிக்கவேண்டிய அவசியமில்லை. நான் உடனே வருவதாகக் கூறு" என்று வேலைக்காரனுக்கியம்பி விட்டு, அவன் சென்றதும் அந்தக் கடிதத்தை ஜெகநாதனிடமளித்தான்.

அக்கடிதத்தில் "என் வாசக சாலையறையில் எவனோ இரகசியக் கள்ளன் நுழைந்திருக்கிறான். நீ வந்து பார்க்கிறாயா? முக்கியமானது ஒன்றும் களவு போனதாகத் தெரியவில்லை. பயனற்ற சில பழைய புகைப் படங்களே காணவில்லை. இப்படிக்கு கருணாகரன்" என்றிருந்தது.

ஜகநாதன் தன் அச்சமைய சிந்தனைக்குத் தோன்றியபடி "இது இலக்ஷ்மணசாமிப் பிள்ளையின் கறுப்புப் புத்தகத்தை இவரே களவாடி வந்து விட்டார் என்று கருதுகிறவர்கள் யாரோ செய்த வேலை" என்றான்.

கிருஷ்ணராவ் "இந்தப் புகைப் படங்களை யெடுத்துச் சென்றது கண்ணை மறைக்கவே யாக்கும்" என்றான். பிறகு கிருஷ்ணராவ் கூறியதுபோல் நேராய்க் கருணாகரம்பிள்ளையின் வீட்டிற்குச் செல்லாமல் இருவரும் இரசாயன சாலைக்குச் சென்றார்கள். அங்குச் சென்றதும் புகைப் படம் பிடிக்கும் கருவிகளடங்கிய ஒருபெரிய பெட்டியை யெடுத்துக் கொண்டு இருவரும் புறப்பட்டார்கள்.

கருணாகரம் பிள்ளை வசிக்குமிடம் கொஞ்ச காலத்திற்கு முன்பு வரையில் பிரபுக்கள் வசித்துக்கொண் டிருந்த பிரதேசம். நகரம் மேற்குபாகம் அதிகமாய்ப் பரவியபோதும் இவர்

குடும்பத்தார்கள் அங்கேயே யிருந்தார்கள். அவர்கள் வாசஸ்தலம் நான்கடுக்கு மாடிகளை யுடைய ஒரு சிவப்புக்கட்டிடம். கருணாகரம் பிள்ளையின் முன்னோர் அங்கு வசித்துக்கொண்டிருந்ததால், இப்போதும் அவரும் அவர் தாயாரும் அவர் சகோதரியும் அங்கேயே வசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கிருஷ்ணராவும் ஜெகநாதனும் அங்குச் சென்றதும் கருணாகரம்பிள்ளை "ஆ! உங்களைக்காண நான் மிக்க சந்தோஷமடைகிறேன். இங்கு நடந்திருப்பது இலக்ஷ்மணசாமி வீட்டில் நடந்ததுபோன்ற களவல்ல. இவ்விஷயம் மர்மமாகவே தெரிகிறது. நாங்கள் போஜனம் செய்துகொண்டிருந்தபோது இது நடந்திருக்க வேண்டும். அதனாற்றான் இரகசியக்களவு என்று நான் கூறினேன்." என்று சொல்லிக் கொண்டே இவர்களைத் தமது வாசகசாலை யறைக்கு அழைத்துச் சென்றார். அந்த அறை வீட்டின் பின்பாகத்திலிருக்கிறது.

கிருஷ்:—"தாங்கள் அங்கிருந்த வஸ்துக்களையெல்லாம் அப்படி யப்படியே விட்டு வைத்திருக்கிறீர்களென்று நம்புகிறேன்" என்றான்.

கருணாகரம்பிள்ளை:—"ஆம், எதையும் தொடாமல் அப்படியே விட்டுவிட்டேன். இத்தகைய விஷயங்களில் நீ யிவ்வாறு இருக்கவேண்டு மென்றே விரும்புவாய் என்று நான் நினைத்தேன். ஆகையால் உடனே கதவை மூடிப் பூட்டிவிட்டு என் வேலைக்காரனாகிய வேலாயுதனை யனுப்பினேன். அவனை யெங்கே யனுப்பினாய்?" என்றார்.

கிருஷ்:—"நான் எங்குமனுப்ப வில்லை. ஏன் அவன் இன்னும் திரும்பி வரவில்லையோ?" என்றான்.

கருணாகரம்பிள்ளை:—"இல்லை; ஆயினும் அவன் அவசியமாக வேண்டியதில்லை" என்றார்.

கிருஷ்ணராவ் அவர் முகத்தை யுற்றுநோக்கி "அப் பழைய புகைப்படங்களைத் தவிர வேறொன்றுங் களவுபோக வில்லையே?" என்றான்.

கருணாகரம் பிள்ளை கபடின்றி "எனக்குப் புலப்பட்டது அவ்வளவே" என்றார்.

கிருஷ்ணராவ் களவுபோன அறையை மிக்க நுட்பமாகச் சோதனை செய்தான். கள்ளன் சாளரவழியாக நுழைந்தான் என்று விளங்கியது. சாளரத்தையும், அவன் திறந்த மேஜையையும், அங்கிருக்கும் நிலைமையையும் நன்றாய்க் கவனித்தான். அதன் பிறகு தன் புகைப்படக் கருவியை யெடுத்துச் சாளரம், பெட்டி இன்னும் சில விடங்கள் ஆகியவைகளைப் படம் எடுத்துக் கொண்டான். கட்டிடத்தின் வெளியில் அதன் பின் பாகம், மற்ற விடங்கள், வீதியிலிருந்து அக்கட்டிடத்திற்குள் செல்லத்தக்க வழிகள் ஆகிய யாவும் நன்றாக உன்னிப்பாய்ச் சோதனை செய்தான்.

அந்த வேலைகளனைத்தும் முடிந்தபின் கருணாகரம் பிள்ளை, கிருஷ்ணராவ், ஜெகநாதன் மூவரும் அங்கிருந்து புறப்பட்டுக் கிருஷ்ணராவின் இரசாயன சாலைக்கு வந்தார்கள். அங்கு வந்ததும் கருணாகரம் பிள்ளையும், ஜெகநாதனும் நடந்த விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்கள். கிருஷ்ணராவ் தான் எடுத்து வந்த புகைப்படங்களைக் கடிதத்தில் உருவங்களாகவெடுக்கும் வேலையில் பிரவேசித்தான்.

கடைசியில் கிருஷ்ணராவ் பத்துப் பனிரண்டு படங்கள் எடுத்தான் என்பது தெரிந்தது. எல்லாம் ஒரே அளவுடையன. கருணாகரம் பிள்ளையும், ஜெகநாதனும் அவற்றைக் கண்டு மிக்க வியப்பும், கலவரமுமடைந்தார்கள். அவ

கள் மனோபாவத்தை யறிந்த கிருஷ்ணராவ், "இவை ஒரு வகை மர்மமான படங்களே. பூதக்கண்ணாடியைக்கொண்டு சில சாத்திர யுக்தங்களின்படி யிவற்றிலிருந்து, களவு நடந்த போது நாம் எதிரிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தால் எவ்வளவு சங்கதிகளைப் பிரத்தியக்ஷமாய்க் காணலாமோ அவ்வளவு சங்கதிகளை யறியலாகும். இத்தகைய சோதனையால் மிக்க மர்மமான கொலைகள்கூடக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் இந்த நவீன ஆராய்ச்சி சீக்கிரத்தில் எங்கும் பரவி விடும்" என்று கூறினான்.

கருணாகரம் பிள்ளையும், ஜெகநாதனும் மிக்க வியப்படைந்தவர்களாய் "நீ கூறுவதை நாங்கள் தெரிந்து கொள்கிறோம்" என்று கூறுகிறவர்கள் போல் தலையசைத்தார்கள். கிருஷ்ணராவ் அப்படங்களை யொழுங்கு படுத்திக் கொண்டே, "துப்பறிபவன் ஒரு குற்றத்தைப் பற்றிய உண்மையை யறியவேண்டுமாயின் முன்னடிக் குற்றம் நடந்த விடத்திற்குச் சென்று அதன் அமைப்பை யெல்லாம் சரியாகப் பார்த்து மனதில் வைத்துக் கொள்ளவேண்டும், அல்லது குறித்துக்கொள்ளவேண்டும். அந்தந்த விடங்களின் உயரம், மனிதர் இரகசியமாக நுழையக்கூடிய மார்க்கங்கள், அங்குள்ள பொருள்கள் இருக்கும் நிலைமைகள் முதலிய யாவற்றையும் சரியாகக் குறித்துக் கொள்ளவேண்டும்.

பிறகு முக்கியமாகத் தோற்றும் யாவற்றையும் படம் பிடித்துக்கொள்ள வேண்டும். பிறகு கணக்கின்படி சோதித்து யாவற்றையும் உண்மையாயுள்ளபடி யறியலாகும். இப்போது தங்கள் வீட்டில் நடந்த விவகாரத்தில் அனேக அதிசயமான விஷயங்களை நான் கண்டுபிடித்திருக்கிறேன். குற்றம் நடந்ததிலுள்ள விஷயங்கள் அழிக்கப்படாத விதமான அத்தாட்சிகள் இதோ விருக்கின்றன.

இத்தகைய அத்தாக்ஷியை யொருவரும் சந்தேகிக்க வழியில்லை. களவு போனவை புகைப்படங்கள் மட்டுமே யென்று நீர் நிச்சயமாய்க் கருதுகிறீரா?" என்றான்.

கருணாகரம்பிள்ளை:—"இல்லை யில்லை நான் விலையுள்ள பொருள்கள் எதையும் அப்படி வெளியில் வைப்பதில்லை" என்றார்.

கிருஷ்:—"சரி, புகைப்படங்கள் இதோ இந்த மேஜையிலிருந்தன; அங்கு வேறு மேஜைகளும் பெட்டிகளுமிருக்கின்றன. அவற்றையெல்லாம் கள்ளன் தொடவில்லை. இதனால், கள்ளன் தனக்கு வேண்டியது எங்கிருக்கிறதென்று அறிந்திருக்கிறான் என்று தெரிகிறது. பூட்டை யுடைத்தவை சுத்தி முதலிய கருவிகளாலல்ல. மரை திருப்பும் உளியால். அது வரையில் அதிகமான சாத்திர ஆராய்ச்சி வேண்டிய வேலையல்ல" என்றான்.

கருணாகரம் பிள்ளை மிக்க வியப்போடு ஜெகநாதனை நோக்கினான். ஏனெனில் இத்தகைய விஷயங்கள் கிருஷ்ணராவ் கூறும்போதுதான் அவர்களுக்கு மிக்க சாதாரணமாகத் தெரிகின்றனவேயன்றி, அவனில்லாத காலத்தில் தாங்களே சிந்தித்தால் ஒன்றுமே புலப்படுவதில்லை.

கிருஷ்ணராவ் கூறத்தொடங்கி "இருக்கட்டும். இப்போது கள்ளன் எப்படி உள்ளே வந்தான். எல்லாச் சாளரங்களும் மூடப்பட்டே யிருந்தன என்று கூறப்படுகின்றன. ஆனால் இதோ இப்பக்கத்திலிருக்கும் சாளரக் கதவின் ஒரு கண்ணாடி அறுத்து உடைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன், அதன் துண்டுகள் அங்கேயே கிடந்தன.

ஆனால் வெளிப்பக்கத்தைச் சற்று கவனியுங்கள். அச்சாளரத்தருகில் செல்லவேண்டுமாயின் உயரமான ஒரு மனிதன் கூட ஏணிமேல் ஏறவேண்டும். ஆனால் அங்கு ஏணி வைத்த அடையாளமாவது கீழே ஆட்கள் யாராவது நின்று

கொண்டிருந்ததாகவாவது ஒரு அடையாளமுமில்லை. இது மட்டுமல்ல, அச்சாளரம் உட்பக்கமிருந்தே அறுக்கப்பட்டிருக்கிறது. அக்கண்ணாடியை யறுத்த வைரத்தின் குறியால் அது நன்றாய்த் தெரிகிறது. சாத்திர ஆராய்ச்சியுடைய சாதாரண புத்தியால் இதை நன்றா யறிந்துகொள்ளலாம்'' என்றான்.

ஜெகநாதன்:—''அப்படியாயின், அதை வீட்டிற்குள்ளேயே யிருந்த யாரேனும், அல்லது எல்லாமறிந்த ஒருவரேனும் செய்திருக்கவேண்டும்'' என்றான்.

கிருஷ்ணராவ் ஆம் என்று தலையசைத்தான்.

ஜெகநாதன் அது யாராகவிருக்குமென்று வியப்போடு சிந்திக்கலானான். உண்மையில், ஜட்கா சுப்பனே இலக்ஷ்மணசாமியின் அறையில் களவு செய்தவனாகவிருந்தாலும், இது அவனால் நடந்ததென்று கருதவழியில்லை. ஆனால் அவன் ஆட்களில் ஒருவனால் நடந்ததாகவிருக்கலாம். இக்களவு என்ன உத்தேசமாகச் செய்யப்பட்டதென்பதை ஜெகநாதன் சிந்திக்கலானான்.

அச்சமயம் கிருஷ்ணராவ், கருணாகரம் பிள்ளையை நோக்கி ''உமது வேலைக்காரனாகிய வேலாயுதன் வந்து விட்டானாவென்று பார்த்துவாரும்'' என்றான்.

அவர் அவ்வாறே சென்று சற்று நேரத்திற்குள் திரும்பி வந்து கலவரமடைந்த முகத்தோடு ''அவன் இன்னும் வரவில்லையே, என்ன காரணமோ தெரியவில்லையே'' என்றார்.

கிருஷ்ணராவ், ''அவன் வரமாட்டான். இது உள்ளுக்குள் நடந்தவேலை. அவனே செய்தவன்'' என்று உறுதியாய்க் கூறினான். கருணாகரம் பிள்ளை மிக்க வியப்போடு ''அடடா!'' என்று பிரமித்து விட்டார்.

கிருஷ்ணராவ், ''எப்படியாயினும், போலீசார் அசட்டையாக விட்டுவிடும் விவகாரம் நம்மிடமிருக்கிறது. அதா

வது அழியாத அத்தாக்ஷி. நாம் கூடிய வரையில் நடந்த விஷயத்தை யொருவாறு உணர்ந்து கொண்டோம்'' என்றான்.

ஜெகநாதன், "அடடா! இதென்ன புகைப்படத்தை மட்டும் களவாடினான்'' என்று வியப்போடு கிருஷ்ணராவை நோக்கினான்.

கிருஷ்ணராவ் கருணாகரம் பிள்ளையை நோக்கி அவை யென்ன படங்கள் என்று கேட்டான். அவர் தடையாற்ற மின்றி "அதிகமாக ஒன்றுமில்லை. சில சொந்தப் படங்கள். எனக்குத் தவிர மற்றவர்களுக்கு உண்மையில் பயன் படா தவை. அவற்றில் அனேகம் படங்கள், கற்றுக்கொள்கிறவ னால் பிடிக்கப்பட்டவை. நான் அனேகம் சபைகளில் அப்போதைக்கப்போதிருந்த சமயம் பிடிக்கப்பட்டவை'' என்றார்.

கிருஷ்ணராவ், "அவற்றில் எதுவேனும் எதிரிகளுக்கு எக்காரியத்திற்கேனும் உபயோகமாகக்கூடியது இருக் குமோ ?'' என்றான்.

கருணாகரம் பிள்ளை நகைத்துக் கொண்டே "நண்பர் களுக்கே விசேஷமாக உபயோகப்படத் தக்கவை'' என்று மனக்களங்க மின்றிக் கூறினார்.

அவர் அப்படிக் கூறினும் அக்களவில் ஏதோ ஒரு காரி யத்தின் உத்தேசம் இருந்தே இருக்கவேண்டும் என்று புலப் பட்டது. "அப்படியாயின் அது இலக்ஷ்மணசாமிப் பிள்ளை வீட்டில் நடந்த சாத்திர யுக்தமான களவுக்குச் சமதையானதே. இலக்ஷ்மணசாமியும் தன்னிடம் அப்படி மதிப்புள்ள வஸ்து ஒன்றும் களவுபோகவில்லை யென்றே கூறினான்'' என்று ஜெகநாதன் சிந்தித்தான். ஆனால் இலக்ஷ் மணசாமியை நம்பாததுபோல் கருணாகரம்பிள்ளையை நம்பாம லிருக்கக் காரணமில்லை. அவர் இக்களவில் தமக்கு நஷ்டம்

[library stamp]

நேர்ந்திருந்தாலும், ஆபத்து நேருமென்று அச்சம் உண்டாகி யிருந்தாலும் அதை வெளியிட்டிருக்க வேண்டியவர். எதற்கும் உண்மையாகவே அவர் மறைத்துக் கூறவேண்டிய காரணம் இருக்கிறதென்று தெரிந்தாலன்றி அவரை யின்னும் அதைப்பற்றிக் குறுக்குக் கேள்விகள் கேட்கலாகாதென்று கிருஷ்ணாராவும் ஜெகநாதனும் பேசாமலிருந்தார்கள்.

கருணாகரம் பிள்ளை மற்ற யாவற்றையும் விட நம்மிடம் அவ்வளவு நம்பிக்கையாகவிருந்த ஆளே நமக்கு இத்தகைய துரோகத்தைச் செய்தானே யென்று மிக்க வியாகூலமும் மனக்கலக்கமு மடைந்துவிட்டார். சாதாரணமான கள்ளர்கள் ஒரு வீட்டில் நுழைந்து களவாடக் கருதும்போது அவ்வீட்டிலுள்ள வேலைக்காரரில் ஒருவரைத் தங்களுக்குடைந்தையாக விருக்கும்படி எவ்விதமாகவாவது வசப்படுத்திக் கொள்வது சுபாவமே யென்பது கருணாகரம் பிள்ளைக்குத் தெரியும். கிருஷ்ணாராவுக்கும், ஜெகநாதனுக்கும் அது தெரிந்ததே. ஆனால் சாதாரணமாய் விலைமதிப்புள்ள சொத்துக்களைக் களவாடுவதற்கே கள்ளர் இத்தகைய சாமார்த்தியமும் கஷ்டமுமான வேலை செய்வார்கள்.

ஆயினும் "இலக்ஷ்மணசாமிப் பிள்ளையின் பெட்டியிலிருந்து களவாடப்பட்டக் கறுப்புப் புத்தகத்தைக் கருணாகரம் பிள்ளையே களவாடிக் கொண்டுவந்துவிட்டாரென்று கருதுவோர் அதைக் கொண்டுபோக முயற்சி செய்வார்கள்; அவர்களுக்கு மிக்க விலையுயர்ந்த நகைகள், ரொக்கம் இவற்றைவிட இது சிறந்ததாகவே தோன்றும். அத்தகையோரே இக்காரியத்தைச் செய்திருப்பார்கள். ஆனால் தாங்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி வீணாய் விட்டதென்று அறிந்துகொண்டார்கள். இத்தகைய காரியத்திற்கு எதற்கும் துணியும் ஆசாமிகள் இருக்கிறார்கள்" என்று ஜெகநாதன் தனக்குள் சிந்தித்துக் கொண்டான்.

186531

மாதவி மாதவன் அல்லது

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

(2 - பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி மு.தலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்.புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அ.ப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும், படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2—0—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

ஆனந்தபோதினி

(இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000 இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பதின்மூன்று வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 56-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொரு வருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனாமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினாங், சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0

வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.